المناهي الشرعية ـ تاميلي

# ஷரீஅத்தில் தடுக்கப்பட்டவைகள்


جمعية الدعوة بالزلفي

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

هاتف: ٤٢٣٤٤٦٦ ٠١٦ ـ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠١٦

182

# ஷரீஅத்தில் தருக்கப்பட்டவைகள்

# المناهي الشرعية

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات في الزلفي
Tel: 966 164234466 - Fax: 966 164234477

**المناهي الشرعية**
**ترجمه إلــى اللغة التاميلية:**
**جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي**
**الطبعة الثانية: ١٤٤٢/٨ هــ.**

ⓗ شعبة توعية الجاليات بالزلفي، ١٤٢٨هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

شعبة توعية الجاليات بالزلفي
المناهي الشرعية – الزلفي ، ١٤٢٨ هـ
٨٧ ص؛ ١٢ × ١٧ سم

**رقم الإيداع : ١٤٢٨/٧٩٤٤**
**ردمك : ٦-٦-٩٩٥٣-٩٩٦-٩٧٨**

# المناهي الشرعية
# ஷரீஅத்தில் தடுக்கப்பட்டவைகள்

சகோதர, சகோதரிகளே!

இறைமார்க்கம் உறுதியான ஈமான்- அல்லாஹ்வின் மீதும் ரஸூலின் மீதும் நம்பிக்கை கொள்வதன் அடிப்ப டையில் நிலை பெற்றுள்ளது. (அல்லாஹ், ரஸூலின் மூலம்) ஏவப்பட்டவைகளை எடுத்து நடப்பதும் விலக்கப் பட்டவைகளை விட்டும் தவிர்ந்து கொள்வதும் அந்த ஈமானுக்கு இன்றியமையாததாகும். இறைமார்க்கத்தின் அச்சு சுழல்வது இம்மாபெரும் இரண்டு துருவத்தின் மீதே ஆகும்.

﴿وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانْتَهُوا﴾ [الحشر:٧]

இத்தூதர் உங்களுக்கு எதைக் கொடுத்தாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். எதை விட்டும் உங்களைத் தடுத்தாரோ (அதிலிருந்து) விலகிக் கொள்ளுங்கள். (59:7)

((...فَإِذَا نَهَيْتُكُمْ عَنْ شَيْءٍ فَاجْتَنِبُوهُ وَإِذَا أَمَرْتُكُمْ بِأَمْرٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ))

(خ/ ٧٢٨٨، م/ ١٣٣٧)

“ஒன்றை விட்டும் உங்களை நான் தடுத்தால் அதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒன்றை ஏவினால் அதை முடிந்த அளவு செய்யுங்கள்” என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். (புகாரி-7288, முஸ்லிம்-1337)

எவற்றைச் செய்யுமாறு -செய்ய வேண்டுமென வலியுறுத்தி இறைவன் கட்டளையிட்டுள்ளானோ, எவற்றைச் செயல்படுத்த வேண்டுமென ஆர்வமூட்டி யுள்ளானோ அவற்றை பிரியத்துடனும், நற்கூலியை- இறைநெருக்கத்தை எதிர்பார்த்தும் செய்வது கொண்டு ஓர் மு.்.மின் தன் இரட்சகனுக்கு அடிபணிந்து வாழ்வது போன்றே-

எவற்றைச் செய்ய வேண்டாமென இறைவன் தடுத் துள்ளானோ- எச்சரிக்கை செய்துள்ளானோ அவற்றைப் பணிந்தும், பயந்தும், கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தும் விட்விடுவதற்கும் கடமைப்பட்டவனாக இருக்கின்றான்.

இந்த வகையில் ஒரு மு.்.மின் “இதைச் செய்! அதைச் செய்யாதே!” என்ற இரு கட்டளைகளுக்கு மத்தியில் சுழல்கின்றான். இவ்விரண்டில் ஒன்றைத் தேர்வு செய்யும் உரிமை அவனுக்கு உண்டு. அதற்கான வழி அவன் முன்னே இருக்கிறது. மறுமையில் அதற்குரிய பிரதிபலன் அவனுக்கு சாதகமாக அல்லது பாதகமக இருக்கும்.

﴿إِنَّا هَدَيْنَاهُ السَّبِيلَ إِمَّا شَاكِرًا وَإِمَّا كَفُورًا﴾ [الإنسان:٣]

அவனுக்கு (மனிதனுக்கு) நாம் நேர்வழி காட்டினோம். அவன் நன்றி செலுத்துபவனாகவோ, நன்றி கெட்ட வனாகவோ இருக்கிறான். (அல்குர்ஆன் 76:3)

நாம் அல்லாஹ்வின் அடிமைகள். அடிமையோ தன் எஜமானின் பொறுப்பில் இருப்பவன். எஜமான் தனது

அடிமைக்கு பல விஷயங்களை ஏவவும் செய்வான். சில விஷயங்களைத் தடுக்கவும் செய்வான். எஜமானின் ஏவல் விலக்கல்களைப் பொருந்திக் கொண்டு, உளப் பூர்வமாக ஏற்றுக் கொண்டு அவனுக்குப் பணிவதைத் தவிர அடிமைக்கு வேறு வழியில்லை. அல்லாஹ் ஒருவனுக்கு மட்டும் நாம் அடிமைகளாக இருப்பதே நமக்கு சிறப்பு சேரப் போதுமானதாகும்.

அன்பார்ந்த வாசகர்களே! தடுக்கப்பட்டுள்ள பல விஷயங்களை இங்கு நான் தொகுத்துள்ளேன். இவை யாவும் ஏகத்துவக் கொள்கை கோட்பாடுகள் தொடர்பாக குர்ஆன் மற்றும் நபிமொழிகளில் கூறப்பட்டவையாகும். இவற்றைத் தொகுத்திருப்பதன் நோக்கம் ஈமானைக் கெடுத்துவிடக்கூடியவைகளை விட்டும், ஈமானில் குறை ஏற்படுத்தும் விஷயங்களை விட்டும் நம்முடைய ஈமான் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றுதான். அவற்றில் வீழ்ந்துவிடாமல் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதுதான். மேலும் அவற்றைக் குறித்து முஸ்லிம்களை எச்சரிக்கை செய்ய வேண்டும்; அவற்றைச் செய்து கொண்டிருப்பவர்களை செய்ய வேண்டாமென அழைக்க வேண்டும்; அவற்றின் தீமையை விட்டும் அல்லாஹ் யாரைப் பாதுகாத்துள்ளானோ அவர்களை அவற்றை விட்டும் தூர விலகியே இருக்க வேண்டுமெனவும் அழைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது தான்.

அல்லாஹ்விடமே நான் இறைஞ்சுகிறேன்; அவனது திருப்பெயர்கள் மற்றும் பண்புகளைக் கொண்டே அவனிடம் உதவியும் தேடுகிறேன். அவனது அருளையே ஆதரவு வைக்கிறேன். அவன் இக்காரியத்தில் பரகத்-அருட்பாக்கியங்களை வழங்குவானாக. இதனை குறை களை விட்டும் தவறுகளை விட்டும் நீங்கியதாக ஆக்கு வானாக! மேலும் இக்காரியம் அவனது திருமுகத்துக் காகவே அமைவதற்கும் அவன் அருள் செய்வானாக! மேலும் இதனைத் தொகுத்தவர், இதனை மேலாய்வு செய்தவர், இதனைப் பிரசுரித்தவர் முஸ்லிம்களிடையே இதனை விநியோகித்தவர் என அனைவருக்கும் அவன் நற்கூலியைத் தருவானாக! அகிலங்களைப் படைத்துப் பரிபாலிக்கின்ற அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்வோம்; அவனையே சார்ந்திருப்போம்; அவனிடமே உதவியும் தேடுவோம்.

1. எந்த நோக்கத்திற்காக உலகில் நீங்கள் படைக்கப் பட்டுள்ளீர்களோ அந்த நோக்கத்தை மறந்துவிடாதீர்கள்.

﴿وَمَا خَلَقْتُ الجِنَّ وَالإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ﴾ [الذاريات:٥٦]

ஜின்னையும், மனிதனையும் என்னை வணங்குவதற் காகவே தவிர (வேறு எதற்காகவும்) நான் படைக்க வில்லை. (அல்குர்ஆன் 51:56)

அதாவது அவர்கள் அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்கி வழிபட வேண்டும். சிலவற்றைச் செய்யுமாறு அவன் அவர்களை ஏவுகிறான்; சிலவற்றைச் செய்யக் கூடாதென அவர்களைத் தடுக்கிறான். இவ்விஷயங் களில் அவனுக்கு அவர்கள் கீழ்படிந்து நடக்க வேண்டும்.

2. வணக்க வழிபாடுகளில் எதையும் அல்லாஹ் அல்லாதவருக்குச் செய்யாதீர்கள். மேலும் வழிபாடுகளில் அவனுடன் மற்றவர்களை இணையாக்காதீர்கள்.

வணக்கதின் அடிப்படை அல்லாஹ்வுக்குப் பணிவ தாகும். வணக்கத்தை அல்லாஹ் அல்லாதவருக்குச் செய்வது உள்ளத்தால், நாவால், உறுப்புக்களால் கூட இருக்கலாம்.

﴿وَاعْبُدُوا اللهَ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا﴾ [النساء:٣٦]

அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். (அல்குர்ஆன் 4:36)

3. படைப்பினத்தை நேசிப்பதெனில் கண்ணியப் படுத்தும்- மகத்துவப்படுத்தும் நேசமாக நேசிக்காதீர்கள். அல்லாஹ்வை நேசிப்பது போல் அதைவிட அதிகமாக எதையும் எவரையும் நேசிக்காதீர்கள்.

ஏனெனில் நேசம் என்பது அல்லாஹ்வுக்காக- அவனது நேசத்திற்காக என்றிருக்க வேண்டும்; அவன் எவற்றை யெல்லாம் நேசிக்கிறானோ அவற்றிற்காக என இருக்க வேண்டும். உலகில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு

நேசமும் அல்லாஹ்வின் பேரில் என இருந்தால் அவனது வழிகாட்டலின்படி இருந்தால் அவை யாவும் அல்லாஹ் வுக்காக என்கிற நேசமாக இருக்கும்.

அல்லாஹ்வையன்றி பல இணை (கடவுள்) களை ஏற்படுத்திக் கொண்டு அல்லாஹ்வை நேசிப்பது போல அவர்களை நேசிப்போரும் மனிதர்களில் உள்ளனர். நம்பிக்கை கொண்டோர் (அவர்களை விட) அல்லாஹ்வை அதிகம் நேசிக்கிறார்கள். (அல்குர்ஆன் 2:165)

4. இறைவனின் திருப்தியை நாடி வழிபாடு செய்பவன் அஞ்சுவதுபோல் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சாதீர்கள். அல்லது மரணிக்கச் செய்தல், பாவம் செய்ததற்காகத் தண்டித்தல் போன்ற அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் செய்ய இயலாத காரியங்களில் அவனைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சாதீர்கள்.

﴿فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِي وَلِأُتِمَّ نِعْمَتِي عَلَيْكُمْ وَلَعَلَّكُمْ تَهْتَدُونَ﴾ [البقرة:١٥٠]

“அவர்களுக்கு நீங்கள் அஞ்ச வேண்டாம். எனக்கே அஞ்சுவீர்களாக! (இன்னும் இந்தக் கட்டளையைப் பேணி வாழ்வீர்களாக!) எதற்காகவெனில் நான் என் அருட் கொடையை உங்களுக்கு முழுமைப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், மேலும் நீங்கள் நேர்வழி பெறக்கூடும் என்பதற்காகவும்தான்.” (2:150)

5. அல்லாஹ் அல்லாதவர்களை அழைக்காதீர்கள். உதாரணமாக இறந்தவர்கள், மலக்குமார்கள், நபி

மார்கள், ஜின்கள் மற்றும் நம் எதிரே இல்லாதவர்கள் ஆகியோரை அழைப்பது போன்று.

﴿ وَمَنْ أَضَلُّ مِمَّنْ يَدْعُو مِنْ دُونِ اللهِ مَنْ لَا يَسْتَجِيبُ لَهُ إِلَى يَوْمِ الْقِيَامَةِ وَهُمْ عَنْ دُعَائِهِمْ غَافِلُونَ، وَإِذَا حُشِرَ النَّاسُ كَانُوا لَهُمْ أَعْدَاءً وَكَانُوا بِعِبَادَتِهِمْ كَافِرِينَ ﴾

[الأحقاف:٥،٦]

அல்லாஹ்வை விடுத்து கியாமத் நாள் வரை தனக்குப் பதிலளிக்க இயலாதவர்களை அழைப்பவரை விட மிகவும் வழிகெட்டவர் யார் இருக்க முடியும்? அவர்களோ தம்மை அழைப்பது பற்றி அறியாதவர்களாய் இருக்கின்றனர். மேலும் மனிதர்கள் அனைவரும் ஒன்று திரட்டப்படும் போது தங்களை அழைத்தவர்களுக்கு அவர்கள் பகைவர் களாகவும் ஆகிவிடுவார்கள். மேலும் தம்மை அவர்கள் வணங்கியதை நிராகரிப்பவர்களாகவும் இருப்பார்கள். (அல்குர்ஆன் 46:5,6)

6. நீங்கள் துன்பத்திலும் கஷ்டத்திலும் இருக்கும் போது அல்லது மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் இருக்கும் போது அல்லாஹ்வினால் மட்டும் இயலுமான காரியங்களில் அவன் அல்லாதவர்களிடம் உதவி தேடா தீர்கள். உதாரணமாக ரிஸ்க்கை (வாழ்வாதாரம்) வேண் டுதல், குழந்தையை வேண்டுதல், நோய் நிவாரணம், பாவமன்னிப்பு, மழை மற்றும் நேர்வழியை வேண்டுதல், கவலையை நீக்கவும் எதிரிகளுக்கு எதிராக உதவி

செய்யவும் வேண்டுதல் போன்ற காரியங்களில் அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடாதீர்கள். ஆனால் நம் எதிரே இருக்கின்ற, உயிருடன் உள்ள மனிதரிடம் அவரால் இயலுமான காரியங்களில் உதவி தேடுவதில் குற்றமில்லை. ஆயினும் உதவி தேடுபவரின் உள்ளம் ஆத்மார்த்த ரீதியாக படைப்பினங்களுடன் சம்பந்தப்படாமல் அல்லாஹ்வைக் கொண்டே சம்பந்தப் பட்டிருக்க வேண்டும்.

﴿ وَلَا تَدْعُ مِنْ دُونِ اللهِ مَا لَا يَنْفَعُكَ وَلَا يَضُرُّكَ فَإِنْ فَعَلْتَ فَإِنَّكَ إِذًا مِنَ الظَّالِمِينَ ﴾

[يونس:١٠٦]

அல்லாஹ்வை விட்டு விட்டு உமக்கு (எவ்வித) நன்மையோ, தீமையோ அளிக்க இயலாதவற்றைப் பிரார்த்திக்காதீர். அவ்வாறு செய்தால் நிச்சமாக நீர் அநியாக்காரர்களில் ஒருவராகிவிடுவீர். (10:106)

7. பயணத்தின் போது இந்தப் பூமியில் ஏதேனும் இடத்தில் நீங்கள் தங்கும்போது நீங்கள் அஞ்சுகின்ற தீங்குகளைத் தடுப்பதற்காக அல்லாஹ் அல்லாதவரைக் கொண்டு பாதுகாப்புத் தேடாதீர்கள்.

அல்லாஹ்வையே பற்றிக் கொள்ளுங்கள், அவனிடமே தஞ்சம் புகுங்குங்கள், அவனது பரிபூரணமான வார்த்தை களைக் கொண்டே அவன் படைத்தவற்றின் தீங்குகளை விட்டும் பாதுகாப்புத் தேடுங்கள். ஆனால் எதிரிகள்,

வனவிலங்குகள் போன்றவற்றுக்கு நீங்கள் அஞ்சுகின்ற இயல்பான அச்சம் எனில் அதில் குற்றமில்லை.

﴿ وَأَنَّهُ كَانَ رِجَالٌ مِنَ الإِنْسِ يَعُوذُونَ بِرِجَالٍ مِنَ الجِنِّ فَزَادُوهُمْ رَهَقًا ﴾ [الجنّ:٦]

மனிதர்களில் உள்ள ஆண்களில் சிலர் ஜின்களில் உள்ள சில ஆண்களைக் கொண்டு பாதுகாப்புத் தேடிக் கொண்டிருந்தனர். எனவே இவர்களுக்குக் கர்வத்தை அவர்கள் அதிகமாக்கி விட்டனர். (அல்குர்ஆன் 72:6)

8. கஅபா அல்லாத வேறு எதையும்- நெருக்கத்தைத் தேடுதல் மற்றும் வழிபாடு செய்யும் நோக்கில் வலம் வராதீர்கள்.

இந்த வகையில் நன்மையை நாடியோ தண்டனைக்குப் பயந்தோ கப்ருகளையோ கட்டடங்களையோ வேறு எதையும் வலம் வருவது கூடாது.

﴿ وَإِذْ جَعَلْنَا البَيْتَ مَثَابَةً لِلنَّاسِ وَأَمْنًا وَاتَّخِذُوا مِنْ مَقَامِ إِبْرَاهِيمَ مُصَلًّى وَعَهِدْنَا إِلَى إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ أَنْ طَهِّرَا بَيْتِيَ لِلطَّائِفِينَ وَالعَاكِفِينَ وَالرُّكَّعِ السُّجُودِ ﴾

[البقرة:١٢٥]

அந்த ஆலையத்தை மக்கள் ஒன்று கூடுமிடமாகவும், பாதுகாப்பு மையமாகவும் நாம் அமைத்ததை நினைவூட்டுவீராக! மகாமே இப்ராஹீமில் தொழுமிடத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். “தவா∴ப் செய்வோருக்காகவும், இ∴திகா∴ப் இருப்போருக்காகவும், ருகூவு, ஸஜ்தா செய்வோருக்காகவும் இருவரும் எனது ஆலயத்

தைத் தூய்மைப்படுத்துங்கள்” என்று இப்ராஹீமிடமும் இஸ்மாயீலிடமும் உறுதிமொழி வாங்கினோம். (2:125)

9. கல், மரம், கப்ரு இன்னும் இது போன்றவற்றைக் கொண்டு பரகத் (பாக்கியம்) தேடிக் கொள்ளாதீர்கள். ஒன்றைக் கொண்டு பரகத் தேடுவது கூடும் என்று குறிப் பிட்டு இறைமார்க்கத்தில் எதற்கு ஆதாரம் உள்ளதோ அதைக் கொண்டு மட்டும் தான் பரகத் தேட வேண்டும். (உதாரணமாக, குர்ஆனைக் கொண்டு-அதன் ஒரு சில அத்தியாயங்களைக் கொண்டு பரகத் தேடுவதுபோல.)

عَنْ أَبِي وَاقِدٍ اللَّيْثِيِّ أَنَّهُمْ خَرَجُوا عَنْ مَكَّةَ مَعَ رَسُولِ الله ﷺ إِلَى حُنَيْنٍ قَالَ وَكَانَ لِلْكُفَّارِ سِدْرَةٌ يَعْكُفُونَ عِنْدَهَا وَيُعَلِّقُونَ بِهَا أَسْلِحَتَهُمْ يُقَالُ لَهَا ذَاتُ أَنْوَاطٍ قَالَ فَمَرَرْنَا بِسِدْرَةٍ خَضْرَاءَ عَظِيمَةٍ قَالَ فَقُلْنَا يَا رَسُولَ الله اجْعَلْ لَنَا ذَاتَ أَنْوَاطٍ فَقَالَ رَسُولُ الله ﷺ قُلْتُمْ وَالَّذِي نَفْسِي بِيَدِهِ كَمَا قَالَ قَوْمُ مُوسَى ﴿اجْعَلْ لَنَا إِلَهًا كَمَا لَهُمْ آلِهَةٌ﴾ [الأعراف:١٣٨] قَالَ إِنَّكُمْ قَوْمٌ تَجْهَلُونَ إِنَّهَا لَسُنَنٌ لَتَرْكَبُنَّ سُنَنَ مَنْ كَانَ قَبْلَكُمْ سُنَّةً سُنَّةً (حم/ ٢٠٨٩٢، ٢٠٨٩٥، ت/ ٢١٨٠)

நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஹுனைனை நோக்கிப் புறப்பட்டோம். நிராகரிப்பாளர்களுக்கு அங்கு ஓர் இலந்தை மரம் இருந்தது. அதன் மீது அவர்கள் பக்தி கொண்டிருந்தார்கள். அதில் தங்களது ஆயுதங் களை (பரகத்திற்காகத்) தொங்கவிட்டிருந்தார்கள். அந்த மரத்திற்கு தாத்து அன்வாத் (நாட்டம் நிறைவேற்றும்

புனித மரம்) என்று சொல்லப்பட்டது. இந்த நிலையில் மற்றொரு பெரிய பசுமையான இலந்தை மரத்தைக் கடந்து சென்றோம். அப்போது, “அல்லாஹ்வின் தூதரே! அவர்களுக்கு ஒரு “தாத்து அன்வாத்” (எனும் புனித மரம்) இருப்பது போன்று எங்களுக்கும் (தேவைகளை நிறைவேற்றித் தரும்) தாத்து அன்வாத்தை ஏற்படுத்தித் தாருங்களேன்!” என்று கேட்டோம். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! மூஸாவின் சமூகத்தினர் (மூஸாவிடம்) “இம்மக்களுக்குக் கடவுள்கள் இருப்பது போல எங்களுக்கும் ஒரு கடவுளை ஏற்படுத்தித் தருவீராக!” என்று கேட்டது போல் நீங்களும் கேட்டுள் ளீர்கள்! திண்ணமாக நீங்கள் உங்களுக்கு முன் சென்ற வர்களின் அதே நடைமுறைகளையே பின்பற்றுகிறீர்கள்” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபுவாகித் அல்லைஸி (ரலி), நூல்: அஹ்மத்(20892,20895), திர்மிதி(2180)

10. அல்லாஹ்விடம் பரிந்துரை செய்யுமாறு யாரிடமும் எப்போதும் வேண்டாதீர்கள். அதனை அல்லாஹ்விடம் மட்டுமே வேண்டுங்கள். ஏனெனில் பரிந்துரை முற்றிலும் அல்லாஹ்வின் அதிகாரத்தில் இருக்கிறது. எனவே அல்லாஹ்விடம் பரிந்துரைக்குமாறு அவனுக்கு நெருக் கமான வானவரிடத்திலோ, அவனால் அனுப்பப்பட்ட தூதரிடத்திலோ, இறந்துபோன நல்லடியாரிடத்திலோ வேண்ட வேண்டாம்.

﴿ وَيَعْبُدُونَ مِنْ دُونِ اللهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَيَقُولُونَ هَؤُلَاءِ شُفَعَاؤُنَا عِنْدَ اللهِ قُلْ أَتُنَبِّئُونَ اللهَ بِمَا لَا يَعْلَمُ فِي السَّمَاوَاتِ وَلَا فِي الأَرْضِ سُبْحَانَهُ وَتَعَالَى عَمَّا يُشْرِكُونَ ﴾ [يونس:١٨]

இவர்கள் அல்லாஹ்வை விட்டுவிட்டு தங்களுக்கு யாதொரு நன்மையும் தீமையும் அளித்திட இயலாத வற்றை (கடவுளெனக் கருதி) வணங்குகின்றனர். “அவர்கள் அல்லாஹ்விடம் எங்களுக்குப் பரிந்துரை செய்பவர்கள்” என்றும் கூறுகின்றனர். (நபியே! இவர் களிடம்) நீர் கேளும்: “வானங்களிலோ பூமியிலோ அல்லாஹ்வுக்குத் தெரியாதவற்றை அவனுக்கு நீங்கள் சொல்லிக் கொடுக்கிறீர்களா?” என்று! அவர்கள் இணை கற்பிப்பதை விட்டும் அவன் தூயவன்! உயர்ந்தவன் (அல்குர்ஆன் 10:18)

11. அல்லாஹ்வைத் தவிர வேறு யார் மீதும் தவக்குல் வைக்காதீர்கள். அவனையே முழுவதும் சார்ந்திருங்கள். உங்கள் காரியங்களை அவனிடத்திலேயே ஒப்படை யுங்கள். ﴿ أَلَيْسَ اللهُ بِكَافٍ عَبْدَهُ ﴾ [الزُّمر:٣٦]

﴿ وَعَلَى اللهِ فَتَوَكَّلُوا إِنْ كُنْتُمْ مُؤْمِنِينَ ﴾ [المائدة:٢٣]

தனது அடியாருக்கு அல்லாஹ் போதுமானவன் இல்லையா? (அல்குர்ஆன் 39:36)

நீங்கள் மு.்.மின்களாக இருந்தால் அல்லாஹ்வையே சார்ந்திருங்கள். (அல்குர்ஆன் 5:23)

12. இவ்வுலகில் அதிகாரம் செலுத்துவதற்கும் துன்பத்தைத் தடுப்பதற்கும் இன்பத்தைத் தருவதற்கும் நபிமார்களுக்கோ வலிமார்களுக்கோ சக்தி இருப்பதாகக் கருதாதீர்கள். ஏனெனில் முன்னரும் பின்னரும் படைக்கும் ஆற்றலும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் படைத்துள்ள இப்பேரண்டத்தில் அவன் எதை நாடியுள்ளானோ, எதை நிர்ணயித்துள்ளானோ, எதை இலகுவாக்கி இருக்கின்றானோ அதுவே நடக்கின்றது.

﴿قُلْ مَنْ يُنَجِّيكُمْ مِنْ ظُلُمَاتِ البَرِّ وَالبَحْرِ تَدْعُونَهُ تَضَرُّعًا وَخُفْيَةً لَئِنْ أَنْجَانَا مِنْ هَذِهِ لَنَكُونَنَّ مِنَ الشَّاكِرِينَ، قُلِ اللهُ يُنَجِّيكُمْ مِنْهَا وَمِنْ كُلِّ كَرْبٍ ثُمَّ أَنْتُمْ تُشْرِكُونَ﴾ [الأنعام:٦٣،٦٤]

(நபியே!) நீர் கேளும்: தரை மற்றும் கடலின் இருள் (களின் அபாயங்) களிலிருந்து உங்களைக் காப்பாற்றுபவன் யார்? (அப்படிக் காப்பாற்றும்) இறைவனிடம்தானே பணிந்தவாறும் மெதுவாகவும் நீங்கள் இறைஞ்சுகிறீர்கள்! இதிலிருந்து அவன் எங்களைக் காப்பாற்றினால் நிச்சயம் நாங்கள் நன்றி செலுத்துவோராய் இருப்போம் என்று! (நபியே!) நீர் கூறும்: இதிலிருந்தும், ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் அல்லாஹ்வே உங்களைக் காப்பாற்றுகிறான். பின்னர் நீங்கள் இணை கற்பிக்கிறீர்கள். (6:63,64)

13. அல்லாஹ்வைத் தவிர யாரையும் மறைவான

வற்றை அறிபவராகக் கருதாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் மட்டுமே மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிபவன். வானத்திலும், பூமியிலும் எதுவுமே அவனுக்கு மறைந்ததாக இல்லை.

﴿قُلْ لَا يَعْلَمُ مَنْ فِي السَّمَاوَاتِ وَالأَرْضِ الغَيْبَ إِلَّا اللهُ وَمَا يَشْعُرُونَ أَيَّانَ يُبْعَثُونَ﴾

[النمل:٦٥]

(நபியே!) நீர் கூறும்: வானங்களிலும், பூமிலும் மறைவானதை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய மாட்டார்கள். (நீங்கள் கடவுளென வணங்கும்) இவர்கள், தாம் எப்போது எழுப்பப்படுவோம் என்பதைக்கூட அறிய மாட்டார்களே! (அல்குர்ஆன் 27:65)

14. நன்மையைத் தரும் அல்லது தீங்கைத் தடுக்கும் எனக் கருதிக்கொண்டு கயிறு, வளையம் அல்லது மாலை போன்றவற்றை உங்களுக்கோ உங்கள் பிள்ளை களுக்கோ அணிவிக்காதீர்கள். அல்லது உங்கள் வீடு, வாகனம் போன்றவற்றில் கட்டித் தொங்கவிடாதீர்கள்.

عَنْ أَبِي بَشِيرٍ الْأَنْصَارِيِّ أَنَّهُ كَانَ مَعَ رَسُولِ اللهِ ﷺ فِي بَعْضِ أَسْفَارِهِ، فَأَرْسَلَ رَسُولُ اللهِ ﷺ رَسُولًا أَنْ لَا يَبْقَيَنَّ فِي رَقَبَةِ بَعِيرٍ قِلَادَةٌ مِنْ وَتَرٍ أَوْ قِلَادَةٌ إِلَّا قُطِعَتْ (خ/ ٣٠٠٥، م/ ٢١١٥)

நான் நபி(ஸல்)அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்த போது அவர்கள், “(கண் திருஷ்டிக்காக) ஒட்டகத்தின் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருக்கும் மாலைகளை அறுக்

காமல் விடாதே” என்று கூறி ஒரு ஆளைத் தூது அனுப்பி னார்கள். அறிவிப்பவர்: அபுபஷீர்(ரலி),நூல்: புகாரி(3005), முஸ்லிம்(2115)

15. துன்பம் நீங்கும் அல்லது அது வராமல் தடுக்கும் என்ற நோக்கத்தில் தாயத்து, மாலை, சிப்பி போன்ற வற்றை அணியாதீர்கள்.

قَالَ النَّبِيُّ ﷺ مَنْ تَعَلَّقَ شَيْئًا وُكِلَ إِلَيْهِ (ت/ ٢٠٧٢، م/ ١٨٠٣٠) حسنه الألباني

“ஒருவர் எதையேனும் தொங்கவிட்டுக் கொண்டால் அவர் அதன் மீதே சாட்டப்படுவார்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உகைம்(ரலி), நூல்: திர்மிதி(2072), அஹ்மத்(18030), இந்த ஹதீஸ் ஹஸன் எனும் தரத்தில் அமைந்தது என அல்பானி அவர்கள் கூறியுள்ளார்கள்.

قال رَسُولُ الله ﷺ : ((إِنَّ الرُّقَى وَالتَّمَائِمَ وَالتِّوَلَةَ شِرْكٌ)) (د/ ٣٨٨٣، جه/ ٣٥٣٠، حم/ ٣٤٣٣)

“மந்திரிப்பது, தாயத்து அணிவது, கணவனை வயப் படுத்துவதற்காக மந்திரித்துக் கட்டுவது ஆகியவை இணைவைப்புச் செயல்களாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: அபூதாவூத்(3883), இப்னுமாஜா(3530), அஹ்மத்(3433), அல்பானி அவர்கள் இதனை சரிகண்டுள்ளார்கள்.

16. கப்ரு இருக்கின்ற பள்ளிவாசலில் தொழாதீர்கள். இது இணைவைப்பின் வாசலை அடைப்பதற்காகவும் அதனை அடியோடு கில்லி எறிவதற்காகவுமாகும்.

﴿ وَأَنَّ الْمَسَاجِدَ لِلَّهِ فَلَا تَدْعُوا مَعَ اللَّهِ أَحَدًا ﴾ [الجن:١٨]

பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கே உரியன. எனவே அல்லாஹ்வுடன் வேறு எவரையும் அழைக்காதீர்கள். (அல்குர்ஆன் 72:18)

17. கப்ருகளின் மீதோ கப்ருகளுக்கு அருகிலோ பரகத்தை நாடித் தொழாதீர்கள். அல்லது கப்ருகளுக் கருகில் பிரார்த்திப்பது சிறந்தது என்றோ அதனருகில் தொழுவது பரிபூரணமானது என்றோ கருதாதீர்கள். இது ஷிர்க்கிலும் அதன் பால் கொண்டு சேர்க்கும் காரணி களிலோ வீழ்ந்திடாமல் எச்சரிக்கையாக இருப்பதற்காக வாகும்.

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ رَسُولُ الله ﷺ :لَعْنَةُ الله عَلَى الْيَهُودِ وَالنَّصَارَى اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسَاجِدَ (خ/ ٤٣٦، م/ ٥٣١) وفي رواية للمسلم:

((أَلَا وَإِنَّ مَنْ كَانَ قَبْلَكُمْ كَانُوا يَتَّخِذُونَ قُبُورَ أَنْبِيَائِهِمْ وَصَالِحِيهِمْ مَسَاجِدَ أَلَا فَلَا تَتَّخِذُوا الْقُبُورَ مَسَاجِدَ إِنِّي أَنْهَاكُمْ عَنْ ذَلِكَ)) (م/ ٥٣٢)

“யூதர்கள் மீதும் கிறிஸ்தவர்கள் மீதும் அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! அவர்கள் தங்கள் நபிமார்களின் அடக்கஸ்தலங்களை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக்

கொண்டனர்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), (புகாரி-436), முஸ்லிம்-531)

மற்றொரு அறிவிப்பில், “உங்களுக்கு முன் சென்ற வர்கள் தங்கள் நபிமார்கள் மற்றும் நல்லடியார்களுடைய கப்ருகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொண் டார்கள். எனவே கப்ருகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். இவ்வாறு செய்வதை விட்டும் உங்களை நான் தடுக்கின்றேன்” என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக உள்ளது. (முஸ்லிம்-532)

18. தொழுகையை விட்டுவிடாதீர்கள். அது அடியா னுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் உள்ள தொடர்பு ஆகும். தொழுகை இறைமார்க்கத்தின் தூணாகும். அதை விட்டவனுக்கு இஸ்லாத்தில் எந்தப் பாத்தியதையும் இல்லை.

عَنْ جَابِرٍعن النَّبِيِّ ﷺ إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ (م/ ٨٢)

“ஒரு மனிதன் இணைவைப்பிலும் இறைநிராகரிப்பிலும் இருக்கிறான் என்பதன் அடையாளம் தொழுகையை விடுவதாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி). நூல்: முஸ்லிம்(82)

19. வழிபாடும் செய்யும் நோக்கில் எங்கும் பயணம் செய்யாதீர்கள். மூன்று பள்ளிவாசல்களுக்கே தவிர! 1. மக்காவிலுள்ள புனிதப் பள்ளிவாசல், 2. மதினாவிலுள்ள மஸ்ஜிதுந்நபவி, 3. ஜெருசேலத்திலுள்ள மஸ்ஜிதுல்

அக்ஸா எனும் பள்ளிவாசல்.

عَـنْ أَبِي هُرَيْـرَةَ عَـنْ النَّبِـيِّ ﷺ قَـالَ لَا تُشَـدُّ الرِّحَـالُ إِلَّا إِلَى ثَلَاثَـةِ مَسَـاجِدَ الْمَسْجِدِ الْحَرَامِ وَمَسْجِدِ الرَّسُولِ ﷺ وَمَسْجِدِ الْأَقْصَى (خ/ ١١٨٩، م/ ١٣٩٧)

"மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுந்நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா எனும் மூன்று பள்ளிவாசல்களுக்கே தவிர வேறு எங்கும் வழிபாடும் செய்யும் நோக்கில் பயணம் மேற் கொள்ளாதீர்கள்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி). நூல் புகாரி(1189), முஸ்லிம்(1397)

20. அல்லாஹ்வை விடுத்து கப்ருகளில் அடங்கப் பட்டவர்களிடம் துஆச் செய்வதற்காகவோ அவர்களிடம் வஸீலா தேடுவதற்காகவோ கப்ருகளை ஸியாரத் செய்யாதீர்கள். ஆனாலும் அவர்களின் தற்போதைய நிலை, இனி அடையவிருக்கும் கதி குறித்து படிப்பினை பெறுவதற்காக ஸியாரத் செய்யலாம். அப்போது அவர்களுக்கு ஸலாம் சொல்வது, அவர்களுக்காகப் பிராத்திப்பது பற்றிக் குற்றமில்லை. (கட்டிடங்கள் எழுப் பப்பட்ட கப்ருகளை எப்போதும் எதற்காகவும் ஸியாரத் செய்யக் கூடாது.)

﴿ ذَلِكُمُ اللهُ رَبُّكُمْ لَهُ الْمُلْكُ وَالَّذِينَ تَدْعُونَ مِنْ دُونِهِ مَا يَمْلِكُونَ مِنْ قِطْمِيرٍ، إِنْ تَدْعُوهُمْ لَا يَسْمَعُوا دُعَاءَكُمْ وَلَوْ سَمِعُوا مَا اسْتَجَابُوا لَكُمْ وَيَوْمَ الْقِيَامَةِ يَكْفُرُونَ بِشِرْكِكُمْ وَلَا يُنَبِّئُكَ مِثْلُ خَبِيرٍ ﴾ [فاطر:١٣،١٤]

அவன் தான் அல்லாஹ்; உங்கள் இறைவன். அவனுக்கே அதிகாரம். அவனையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் அணுவளவும் அதிகாரம் படைத்தவர்களல்லலர். நீங்கள் அவர்களை அழைத்தால் உங்கள் அழைப்பை அவர்கள் செவியுற மாட்டார்கள். செவியேற்றார்கள் என்று வைத்துக் கொண்டாலும் உங்களுக்குப் பதில் தர மாட்டார்கள். கியாமத் நாளில் நீங்கள் இணை கற்பித்ததை அவர்கள் மறுத்து விடுவார்கள். நன்கறிந்தவனைப்போல் உமக்கு எவரும் அறிவிக்க முடியாது. (அல்குர்ஆன் 35:13,14)

21. கப்ருகளின் மீது கட்டிடம் எழுப்பவோ, தரைக்கு மேல் கப்ருகளை உயர்த்தவோ மேடாக்கவோ செய்யா தீர்கள். மேலும் கப்ருகளைப் பூசவோ, அவற்றில் எழுத் துக்களையும் உருவங்களையும் பதிக்கவோ, அங்கு விளக்குகளை ஏற்றவோ செய்யாதீர்கள். ஏனெனில் இவையெல்லாம் ஒரு வகையில் பொருளாதாரத்தை வீணாக்கும் செயல்களாகும். முக்கியமாக இவை ஷிர்க்கின் பக்கம் கொண்டு செல்ல உதவும் காரியங் களாகும். மேலும் கற்சிலைகளைப்போல் கப்ருகளையும் கண்ணியப்படுத்தும் வரம்பு மீறிய போக்கு அதிலுள்ளது.

عَنْ أَبِي الْهَيَّاجِ الْأَسَدِيِّ قَالَ قَالَ لِي عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ أَلَا أَبْعَثُكَ عَلَى مَا بَعَثَنِي عَلَيْهِ رَسُولُ الله ﷺ أَنْ لَا تَدَعَ تِمْثَالًا إِلَّا طَمَسْتَهُ وَلَا قَبْرًا مُشْرِفًا إِلَّا سَوَّيْتَهُ

(م/ ٩٦٩، د/ ٣٢١٨، ت/ ١٠٤٩)

அலீ(ரலி)அவர்கள் என்னிடம் கூறினார்கள்: நபி(ஸல்) அவர்கள் என்னை எந்தப் பணிக்காக அனுப்பி வைத்தார்களோ அந்தப் பணிக்காக உன்னை நான் அனுப்பி வைக்கிறேன். “எந்தக் கற்சிலையையும் அழிக்காமல் விடாதே! தரைக்கு மேல் உயர்த்தப்பட்ட எந்தக் கப்ரையும் தரை மட்டமாக்காமல் விடாதே!” அறிவிப்பவர்: அபுல்ஹய்யாஜ், நூல்: முஸ்லிம்(969), அபூதாவூது(3218), திர்மிதி(1049)

22. மனிதன், உயிரினங்கள், பறவைகள். மீன்கள் போன்ற உயிருள்ளவற்றின் உருவங்களை வரையாதீர்கள். அடையாள அட்டையிலும், பாஸ்போர்ட்டிலும் பதிப்பது போன்ற அவசியத் தேவைகளுக்காகவே தவிர.

عَنْ ابْنِ عَبَّاسٍ أَنَّ رَسُولَ الله ﷺ قَالَ كُلُّ مُصَوِّرٍ فِي النَّارِ يَجْعَلُ لَهُ بِكُلِّ صُورَةٍ صَوَّرَهَا نَفْسًا فَتُعَذِّبُهُ فِي جَهَنَّمَ (م/ ٢١١٠)

“உருவங்களைத் தீட்டிய ஒவ்வொருவனும் நரகத்திற்குச் செல்வான். அவன் தீட்டிய ஒவ்வொரு உருவத்திற்கும் உயிர் கொடுக்கப்பட்டு அது அவனை நரகில் வேதனை செய்யும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), (முஸ்லிம்- 2110)

23. அல்லாஹ்வை விடுத்து மற்றவருக்காக அவரது அருளை அல்லது நெருக்கத்தைத் தேடி அல்லது அவருக்குப் பயந்து பிராணிகளைப் பலியிடாதீர்கள். உதாரணமாக ஜின்களின் தீங்கை விட்டும் தடுப்பதற்காக ஜின்களுக்காகப் பலியிடுவது, இறந்தவர்

களுக்காக அவர்களின் நன்மையை வேண்டி (அவர்களின் ஆவியை விட்டும் பாதுகாப்பு பெற) பலியிடுவது போன்று.

﴿قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلهِ رَبِّ العَالَمِينَ، لَا شَرِيكَ لَهُ وَبِذَلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِينَ﴾ [الأنعام:١٦٢، ١٦٣]

எனது தொழுகை, எனது குர்பானி (பலியிடுதல்), எனது வாழ்வு, எனது மரணம் யாவும் அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன. அவனுக்கு நிகர் யாரும் இல்லை. இவ்வாவறே நான் கட்டளையிடப் பட்டுள்ளேன்; முஸ்லிம்களில் நான் முதலானவன் என்றும் கூறுவீராக! (அல்குர்ஆன்: 6:162,163)

24. அல்லாஹ்வை விடுத்து மற்றவருக்காக அறுத்துப் பலியிடும் இடத்தில் அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிடாதீர்கள்.

عَنْ ثَابِتِ بْنِ الضَّحَّاكِ قَالَ نَذَرَ رَجُلٌ عَلَى عَهْدِ رَسُولِ اللهِ ﷺ أَنْ يَنْحَرَ إِبِلًا بِبُوَانَةَ فَأَتَى النَّبِيَّ ﷺ فَقَالَ إِنِّي نَذَرْتُ أَنْ أَنْحَرَ إِبِلًا بِبُوَانَةَ فَقَالَ النَّبِيُّ ﷺ هَلْ كَانَ فِيهَا وَثَنٌ مِنْ أَوْثَانِ الْجَاهِلِيَّةِ يُعْبَدُ قَالُوا لَا قَالَ هَلْ كَانَ فِيهَا عِيدٌ مِنْ أَعْيَادِهِمْ قَالُوا لَا قَالَ رَسُولُ اللهِ ﷺ أَوْفِ بِنَذْرِكَ فَإِنَّهُ لَا وَفَاءَ لِنَذْرٍ فِي مَعْصِيَةِ اللهِ وَلَا فِيمَا لَا يَمْلِكُ ابْنُ آدَمَ (د/ ٣٣١٣)

புவானா எனுமிடத்தில் ஒரு ஒட்டகத்தை அறுப்பதாக நபி(ஸல்) அவர்களின் காலத்தில் ஒருவர் நேர்ச்சை செய்திருந்தார். அவர் நபியிடம் வந்து “நான் புவானா

எனுமிடத்தில் ஒரு ஒட்டகத்தை அறுப்பதாக நேர்ந்தி ருந்தேன் (அதை நிறைவேற்றலாமா?)” என்று கேட்டார். உடனே நபி(ஸல்)அவர்கள், “அங்கு அறியாமைக் காலத் தவர்கள் வணங்கிவந்த விக்கிரகம் ஏதும் உள்ளதா?” என்று கேட்டார்கள். அதற்கு (தோழர்கள்) இல்லை என்று கூறினார்கள். “அங்கு அவர்களின் திருவிழாக்கள் ஏதும் நடக்கிறதா” என்றும் கேட்டார்கள். அதற்கும் அவர்கள் இல்லை என்றே கூறினார்கள். உடனே “உன் நேர்ச் சையை நிறைவேற்றுவீராக! ஏனெனில் அல்லாஹ்வுக்கு பாவம் செய்கின்ற காரியங்களிலும், நேர்ச்சையயை நிறைவேற்றுதல் என்பதில் மனிதனின் உடமையில் இல்லாதவற்றிலும் நேர்ச்சையை நிறைவேற்றுதல் என்பது கிடையாது” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஸாபித் பின் லஹ்ஹாக்(ரலி), நூல்: அபூதாவூத்(3313) அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

25. நற்செயல், தான தர்மம் போன்ற எந்த வழிபாட் டையும் அல்லாஹ்வுக்காகவே தவிர நேர்ந்து கொள்ளா தீர்கள். அந்த வழிபாட்டின் மூலம் கப்ருகள், தர்ஹாக்கள், அல்லது தைக்காக்களில் அடங்கப்பட்ட நல்லடியார் களிடம் நெருக்கத்தைத் தேடாதீர்கள். (அதாவது அங்கு நேர்ந்து கொள்ளாதீர்கள்.)

عَنْ عَائِشَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ مَنْ نَذَرَ أَنْ يُطِيعَ الله فَلْيُطِعْهُ وَمَنْ نَذَرَ أَنْ يَعْصِيَهُ فَلَا يَعْصِهِ (خ/ ٦٦٩٦، ت/ ١٥٢٦، نس/ ٣٧٤٦)

“அல்லாஹ்வுக்கு வழிபாடு செய்வதாக ஒருவர் நேர்ச்சை செய்திருந்தால் அதை அவர் நிறைவேற்றட்டும். (அல்லாஹ்வின் கட்டளையை மீறி) பாவம் செய்வதாக ஒருவர் நேர்ச்சை செய்திருந்திருந்தால் அதை நிறை வேற்ற வேண்டாம்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரி(6696), திர்மிதி (1526), நஸயீ(3746)

26. அல்லாஹ்வுடன் அவனது படைப்பினங்களில் எவரையும் எதனையும் சமமாகக் கருதாதீர்கள்.

﴿فَلَا تَجْعَلُوا لِلَّهِ أَنْدَادًا وَأَنْتُمْ تَعْلَمُونَ﴾ [البقرة:٢٢]

நீங்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு நிகரான வற்றை ஏற்படுத்தாதீர்கள். (அல்குர்ஆன் 2:22)

عَنِ ابْنِ عَبَّاسٍ أَنَّ رَجُلًا قَالَ يَا رَسُولَ اللهِ مَا شَاءَ اللهُ وَشِئْتَ فَقَالَ جَعَلْتَنِي لِلَّهِ عَدْلًا بَلْ مَا شَاءَ اللهُ وَحْدَهُ (حم/ ٢٤٣٠)

ஒரு மனிதர் (நபியவர்களிடம் வந்து) “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் நாடியதும், நீங்கள் நாடியதும் நடந்தது” என்று கூறினார். அப்போது நபி(ஸல்)அவர்கள், “நீ என்னை அல்லாஹ்வுக்கு நிகராக்கிவிட்டீரா? இல்லை! அல்லாஹ் நாடியதே நடந்தது (என்று கூறுவீராக!)” எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), நூல்: அஹ்மத்(2430), அல்பானி இதை சரிகண்டுள்ளார்கள்.

“அல்லாஹ்வையும் உங்களையும் தவிர எனக்கு வேறு யாரு இருக்கிறார்? எனக்கு வானத்தில் அல்லாஹ்வும் பூயில் நீங்களும் இருக்கிறீர்கள், நான் அல்லாஹ்வையும் உங்களையும் தான் முழுவதுஞ் சார்ந்திருக்கிறேன்” என்று சிலர் கூறுவதும் இதற்கு உதாரணமாகும். இவை அனைத்துமே கூடாததும், அல்லாஹ்வுக்கு இணை வைப்பதுமாகும்.

27. அல்லாஹ்வின் உள்ளமை பற்றி சிந்திக்காதீர்கள். ஏனெனில் “அவனைப் போல் எதுவுமில்லை” (45:11) என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ﴾ [الشُّورى:١١]

பகுத்தறிவால் அவனைக் கற்பனை செய்ய முடியாது. இவ்வுலகில் அவனைக் கண்களால் பார்க்க முடியாது. எனவே உங்கள் மனதில் ஷைத்தானின் ஊசலாட்டத்திற்கு இடம் கொடுத்து விடாதீர்கள். அதைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுங்கள். மேலும் “அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர் மீதும் நம்பிக்கை கொண்டேன்” என்று கூறுங்கள்.

عن ابن عمر قال قال رسول الله ﷺ تفكروا في آلآء الله ولاتتفكروا في الله

(طب الأوسط ٦ / ٢٥٠، الشعب ١/ ١٣٦، السلسلة الصحيحة ٤/ ٣٩٥)

“அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பற்றி சிந்தியுங்கள். அல்லாஹ்வைப் பற்றி சிந்திக்காதீர்கள்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு

உமர்(ரலி), நூல்: தப்ரானி அவ்ஸத்- பாக: 6, பக்: 250, ஷுஅபுல் ஈமான்- பாக: 1, பக்: 136, ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா- பாக: 4, பக்: 395, அல்பானி அவர்கள் இதனை “ஹஸன்” என்று கூறியுள்ளார்கள்.

28. அல்லாஹ் தனது உள்ளமையுடன் நம்முடன் இருப்பதாக் கருதாதீர்கள். அவன் நம்முடன் இருக்கிறான் என்றால் அவனது அறிவு ஞானமும் பார்க்கும் ஆற்றலும் நம்மைச் சூழ்ந்துள்ளது; அவன் நமக்கு உதவியும் ஒத்தா சையும் செய்து கொண்டிருக்கிறான் என்று பொருள். அளவற்ற அருளாளனான அல்லாஹ் தனது படைப்பினங் களை விட்டும் தூரமாகி நமக்கு மேலே வானத்தில் தனது உள்ளமையுடன் அர்ஷின் மீது அமர்ந்திருக் கிறான். இவ்வாறு அவன் அமர்ந்திருப்பது அவனது கண்ணியத்திற்கும், மகத்தான அதிகாரத்திற்கும் ஏற்ற வகையிலாகும். ஏனெனில் அவனைப் போல் எதுவும் இல்லை. அவனுக்கு நிகர், இணை, துணை எதுவும் எவனும் கிடையாது. அவன் அனைத்தையும் நன்கு அறிந்தவன்!

﴿ وَهُوَ الْقَاهِرُ فَوْقَ عِبَادِهِ وَهُوَ الْحَكِيمُ الْخَبِيرُ ﴾ [الأنعام:١٨]

அவனே தன் அடியார்கள் மீது ஆதிக்கம் செலுத்து பவன். அவன் ஞானமுள்ளவன்; நன்கறிந்தவன். (6:18)

29. அல்லாஹ்வுக்கென எந்தப் பெயர்களையும் பண்புச் சொற்களையும் நீங்களாகச் சூட்டாதீர்கள்.

ஆனால் எந்தப் பெயர்களை- பண்புச் சொற்களை மகத்தான தனது வேதத்தில் தனக்கென அல்லாஹ் சூட்டி யுள்ளானோ நபி(ஸல்) அவர்கள் தமது ஹதீஸ்களில் கொடுத்துள்ளார்களோ அந்தப் பெயர்களை- பண்புச் சொற்களை அல்லாஹ்வுக்குச் சூட்டுங்கள். ஏனெனில் அல்லாஹ்வின் பெயர்கள் குர்ஆன் ஹதீஸில் இடம் பெற்றிருப்பவையாகும். இதில் அறிவுக்கும் இடமில்லை. அழகான பெயரென ஒன்றை உருவாக்கவும் இடமில்லை.

﴿ قُلِ ادْعُوا اللهَ أَوِ ادْعُوا الرَّحْمَنَ أَيًّا مَا تَدْعُوا فَلَهُ الأَسْمَاءُ الحُسْنَى ﴾ [الإسراء:١١٠]

“அல்லாஹ் என்று அழையுங்கள் அல்லது ரஹ்மான் என்று அழையுங்கள் நீங்கள் எந்தப் பெயரைக் கூறியும் அழைக்கலாம். பல அழகிய திருப்பெயர்கள் அவனுக்கு உள்ளன” என்று கூறுவீராக. (அல்குர்ஆன் 17:110)

30. அல்லாஹ்வின் பெயர்களிலும், பண்புகளிலும் தவாறக எதையும் கூறாதீர்கள். அதாவது அவற்றை மறுக்கவோ, வெறுமையாக்கவோ, அவற்றுக்கு தவறான வியாக்கியானம் கொடுக்கவோ, படைப்பினங்களின் பெயர்கள் மற்றும் பண்புகளோடு அவற்றை ஒப்பிடவோ, அவற்றில் இல்லாததை நுழைக்கவோ, அவற்றை உவமைப்படுத்தவோ செய்யாதீர்கள்.

﴿ وَلله الأَسْمَاءُ الحُسْنَى فَادْعُوهُ بِهَا وَذَرُوا الَّذِينَ يُلْحِدُونَ فِي أَسْمَائِهِ سَيُجْزَوْنَ مَا كَانُوا يَعْمَلُونَ ﴾ [الأعراف:١٨٠]

அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள். அவனுடைய பெயர்களில் தவறாகக் கூறுவோரை விட்டு விடுங்கள். அவர்கள் செய்து வந்தத்றகாக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 7:180)

31. அல்லாஹ்வின் திருமுகத்தைச் சொல்லி எதையும் எப்போதும் கேட்காதீர்கள். மாறாக அல்லாஹ்வின் அழகிய பெயர்கள் மற்றும் உயர்ந்த பண்புச் சொற்களைக் கொண்டு தான் அவனிடம் கேட்க வேண்டும்.

عن أبي عبيد مولى رفاعة بن رافع أن رسول الله ﷺ قال: ملعون من سأل بوجه الله و ملعون من يُسأَل بوجه الله ثم منع سائله ما لم يسأله هُجرا (ابن عساكر، والطبراني الكبير٢٢/ ٣٧٧، السلسلة الصحيحة ٥/ ٣٦٣)

“அல்லாஹ்வின் திருமுகத்தைச் சொல்லி கேட்பவன் சபிக்கப்பட்டவனாவான். ஒருவன் அல்லாஹ்வின் திருமுகத்தைக் கொண்டு கேட்கப்பட்டு பிறகு கேட்டவனுக்கு அவன் எதையும் கொடுக்கவில்லை எனில் அவனும் சபிக்கப்பட்டவனாவான்; கேட்பவன் தேவையில்லாததைக் கேட்காதிருக்கும்பட்சத்தில்!” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: தப்ரனி கபீர், பா: 22, பக்: 377, ஸில்ஸிலா ஸஹீஹா, பா: 5, பக்: 363,) இந்த ஹதீஸ் ஹஸன் எனும் தரத்திலமைந்தது என அல்பானி அவர்கள் கூறியுள்ளார்கள்.

32. ஷரீஅத்தில் அனுமதியில்லாத வழிகள் மூலம் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கவோ அவன் பால் நெருங்கிச் செல்லவோ செய்யாதீர்கள். உதாரணமாக, இறைவா! இன்னாரின் பொருட்டால், இன்னாரின் அந்தஸ்தின் பொருட்டால் உன்னிடம் கேட்கிறேன் என்று சிலர் பிரார்த்திப்பது போன்று.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ وَابْتَغُوا إِلَيْهِ الوَسِيلَةَ وَجَاهِدُوا فِي سَبِيلِهِ لَعَلَّكُمْ تُفْلِحُونَ﴾ [المائدة:٣٥]

நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன் பக்கம் நெருங்கிச் செல்வதற் கான வழிவகையினைத் தேடுங்கள். அவன் பாதையில் அறப்போர் செய்யுங்கள். வெற்றி பெறுவீர்கள். (5:35)

33. நீங்கள் எவ்வளவு தான் பாவங்கள் செய்திருந் தாலும் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்து விடாதீர்கள்.

﴿إِنَّهُ لَا يَيْئَسُ مِنْ رَوْحِ اللهِ إِلَّا القَوْمُ الكَافِرُونَ﴾ [يوسف:٨٧]

(இறைவனை) நிராகரிக்கும் கூட்டத்தினரைத் தவிர வேறு எவரும் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்க மாட்டார்கள். (அல்குர்ஆன் 12:87)

34. நீங்கள் எவ்வளவு அதிகமாக அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடந்தாலும் அவனது சூழ்ச்சி குறித்து அச்சமற்று இருக்காதீர்கள்.

﴿ أَفَأَمِنُوا مَكْرَ اللهِ فَلَا يَأْمَنُ مَكْرَ اللهِ إِلَّا القَوْمُ الخَاسِرُونَ ﴾ [الأعراف:٩٩]

அல்லாஹ்வின் சூழ்ச்சி குறித்து அச்சமற்று இருக்கிறார்களா? நஷ்டமடைந்த கூட்டத்தினர் தவிர (மற்றவர்கள்) அல்லாஹ்வின் சூழ்ச்சி குறித்து அச்சமற்று இருக்க மாட்டார்கள். (அல்குர்ஆன் 7:99)

34. அல்லாஹ்வைப் பற்றி (என்னைத் தண்டித்து விடுவான், எனக்கு உதவி புரியமாட்டான் என்பது போன்று) தவறாக எண்ணாதீர்கள். ஏனெனில் அல்லாஹ்வின் மீது அவனுடைய அடியார் வைக்கும் நல்லெண்ணத்திற்கு ஏற்பவே அல்லாஹ்வும் உதவுகிறான்.

عَنْ جَابِرٍ قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ قَبْلَ مَوْتِهِ بِثَلَاثَةِ أَيَّامٍ يَقُولُ لَا يَمُوتَنَّ أَحَدُكُمْ إِلَّا وَهُوَ يُحْسِنُ الظَّنَّ بِاللهِ عَزَّ وَجَلَّ (م/ ٢٨٧٧)

“அல்லாஹ்வைப் பற்றி நல்லெண்ணம் கொள்ளாமல் உங்களில் யாரும் மரணிக்க வேண்டாம்” என்று நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர(ரலி) நூல்: முஸ்லிம்(2877)

35. அல்லாஹ்வை- அன்பின் அடிப்படையில் மட்டுமோ ஆதரவின் அடிப்படையில் மட்டுமோ வணங்காதீர்கள். இதுபோல் அல்லாஹ்வை அச்சத்தின் அடிப்படையில் மட்டும் வணங்காதீர்கள். மாறாக ஆதரவையும் அச்சத்தையும் ஒரு பறவையின் இரு இறக்கைகள் போல் ஆக்கி அவனை வணங்குங்கள். ஏனெனில் ஒரே ஒரு

இறக்கை உள்ள பறவை உயரே பறந்திட முடியாது. நம்பிக்கை கொண்டு நல்லமல்கள் செய்யும் இறை அடியார்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

﴿أُولَئِكَ الَّذِينَ يَدْعُونَ يَبْتَغُونَ إِلَى رَبِّهِمُ الوَسِيلَةَ أَيُّهُمْ أَقْرَبُ وَيَرْجُونَ رَحْمَتَهُ وَيَخَافُونَ عَذَابَهُ﴾ [الإسراء:٥٧]

இவர்கள் யாரிடம் பிராத்திக்கிறார்களோ அவர்களில் (இறைவனுக்கு) மிகவும் நெருக்கமானவர்களே தமது இறைவனை நோக்கி (நெருங்குவதற்குரிய) வஸீலாவை (வழிவகையினை)த் தேடுகின்றனர். அவனது அருளை எதிர்பார்க்கின்றனர். அவனது வேதனைக்கு அஞ்சு கின்றனர். (அல்குர்ஆன் 17:57)

﴿نَبِّئْ عِبَادِي أَنِّي أَنَا الغَفُورُ الرَّحِيمُ، وَأَنَّ عَذَابِي هُوَ العَذَابُ الأَلِيمُ﴾ [الحجر:٤٩،٥٠].

நான் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன் என்பதையும், எனது வேதனை தான் துன்புறுத்தும் வேதனை என்பதையும் எனது அடியார்களுக்கு அறிவிப்பீராக! (அல்குர்ஆன் 15:49,50)

36. நல்ல அமல்கள் செய்யாமல் இறையருளை மட்டும் நம்பியிருக்காதீர்கள். ஏனெனில் அமல்களை அழகுற-செம்மையாக நிறைவேற்றுவது அல்லாஹ்வைப் பற்றி நல்லெண்ணம் கொள்வதன் அடையாளமாகும். சோம்பிக் கிடத்தல், அசட்டையாக இருத்தல் மூலம் இறை

யருளைப் பெற முடியாது. மாறாக உண்மையான நம்பிக்கை கொண்டு நல்ல அமல் செய்வதன் மூலமே இறையருளைப் பெற முடியும். அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு அருகில் உள்ளது.

﴿إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَاجَرُوا وَجَاهَدُوا فِي سَبِيلِ اللهِ أُولَئِكَ يَرْجُونَ رَحْمَةَ اللهِ وَاللهُ غَفُورٌ رَحِيمٌ﴾ [البقرة:٢١٨]

எவர்கள் நம்பிக்கை கொண்டு, ஹிஜ்ரத் செய்து, அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிந்தார்களோ அவர்களே அல்லாஹ்வின் அருளை எதிர்பார்க்கின்றனர். அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன்; மிக்க கருணை யுள்ளவன். (அலகுர்ஆன் 2:218)

37. திருக்குர்ஆனையோ, இறைத்தூதரையோ, இறை மார்க்கத்தையோ இன்னும் அல்லாஹ்வைப் பற்றி கூறப்பட்டுள்ள எதையும் கேலி, கிண்டல் செய்யவோ இழிவுபடுத்தவோ அற்பமாகக் கருதவோ செய்யாதீர்கள். விளையாட்டுக்காக்கூட அவ்வாறு செய்யாதீர்கள்.

உதாரணமாக மார்க்கக் கல்வியையும் மார்க்க அறிஞர்களையும் பரிகாசம் செய்வது, நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதையும், அப்பணியைச் செய்வோ ரையும், தாடியையும் மிஸ்வாக் செய்வதையும் இன்னும் இதுபோன்ற மார்க்கச் சட்டங்களையும் மார்க்கத்தின் அடையாளச் சின்னங்களையும் கேலி செய்வது

ஆகியவை போன்று! இவை அனைத்தும் கு.்.ப்ர் எனும் இறைமறுப்பாகும்.

﴿وَلَئِنْ سَأَلْتَهُمْ لَيَقُولُنَّ إِنَّمَا كُنَّا نَخُوضُ وَنَلْعَبُ قُلْ أَبِاللهِ وَآَيَاتِهِ وَرَسُولِهِ كُنْتُمْ تَسْتَهْزِئُونَ، لَا تَعْتَذِرُوا قَدْ كَفَرْتُمْ بَعْدَ إِيمَانِكُمْ﴾. [التوبة: ٦٥،٦٦].

அவர்களிடம் (இது பற்றிக்) கேட்டால் வேடிக்கை யாகவும் விளையாட்டாகவும் பேசினோம் என்று கூறு வார்கள். அல்லாஹ்வையும் அவனது வசனங்களையும் அவனது தூதரையுமா கேலி செய்து கொண்டிருந்தீர்கள்? என்று (நபியே!) கேட்பீராக! (எதையும் சொல்லிச்) சமாளிக்காதீர்கள்! நிச்சயமாக நீங்கள் நம்பிக்கை கொண்ட பின் நிராகரித்துவிட்டீர்கள். (9:65,66)

38. அல்லாஹ்வின் வசனங்களை மறுப்பதிலும் கேலி கிண்டல் செய்வதிலும் மூழ்கியிருப்போருடன் நீங்கள் அமர வேண்டாம். ஆனால் அவர்களுக்கு இது தவறு என்று எடுத்துச் சொல்லி பிரச்சாரம் செய்வதற்காகவோ அதை விட்டும் அவர்களை எச்சரிப்பதற்காகவோ தவிர.

﴿وَقَدْ نَزَّلَ عَلَيْكُمْ فِي الكِتَابِ أَنْ إِذَا سَمِعْتُمْ آَيَاتِ اللهِ يُكْفَرُ بِهَا وَيُسْتَهْزَأُ بِهَا فَلَا تَقْعُدُوا مَعَهُمْ حَتَّى يَخُوضُوا فِي حَدِيثٍ غَيْرِهِ إِنَّكُمْ إِذًا مِثْلُهُمْ إِنَّ اللهَ جَامِعُ الْمُنَافِقِينَ وَالكَافِرِينَ فِي جَهَنَّمَ جَمِيعًا﴾ [النساء:١٤٠]

அல்லாஹ்வின் வசனங்கள் மறுக்கப்பட்டு கேலி செய்யப்படுவதை நீங்கள் செவியுற்றால் அவர்கள் வேறு

பேச்சுக்களில் ஈடுபடும் வரை அவர்களுடன் அமராதீர்கள். (அவர்களுடன் அமர்ந்தால்) அப்போது நீங்களும் அவர்களைப் போன்றவர்களே என்று இவ்வேதத்தில் உங்களுக்கு அவன் அருளியுள்ளான். நிச்சயமாக அல்லாஹ் நயவஞ்சகர்களையும் இறைமறுப்பாளர்கள் அனைவரையும் நரகில் ஒன்று சேர்ப்பான். (அல்குர்ஆன் 4:140)

39. அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்தை விட்டு விட்டு வேறு சட்டத்தின்படி தீர்ப்பளிக்காதீர்கள். அல்லது அல்லாஹ்வுடைய சட்டம் அநியாயமானது, கொடுமையானது அல்லது வரம்பு மீறியது, கடுமையானது அல்லது அல்லாஹ்வுடைய சட்டம் குறைபாடுடையது, பரிபூரணமானதல்ல என்றோ அல்லது இந்தச் சட்டத்தை விட மற்ற சட்டம் சிறந்து, இதற்கு நிகரானது, மனித வாழ்க்கைக்கு ஏற்றது என்றோ அல்லது அல்லாஹ்வுடைய சட்டம் தற்காலத்துக்குப் பொருத்தமானதல்ல என்றோ கருதாதீர்கள். ஏனெனில் இவையனைத்தும் இறைநிராகரிப்பும் இறைமார்க்கத்தை விட்டும் வெளியேற்றிவிடும் செயலுமாகும்.

﴿ وَمَنْ لَمْ يَحْكُمْ بِمَا أَنْزَلَ اللهُ فَأُولَئِكَ هُمُ الكَافِرُونَ ﴾ [المائدة:٤٤]

அல்லாஹ் அருளிய (சட்டத்) தைக் கொண்டு யார் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் காபிர்களே! (5:44)

40. அல்லாஹ்விடமிருந்து அவனுடைய வேதத்தின் வழியாகவோ அவனது தூதர் வழியாகவோ வந்துள்ள

எந்தச் சட்டத்தையும் வெறுக்காதே! உதாரணமாக பலதாரமணம் புரிதல், வட்டி தடுக்கப்படுதல், ஸகாத் கடமை ஆகியவை போன்று.

﴿ وَالَّذِينَ كَفَرُوا فَتَعْسًا لَهُمْ وَأَضَلَّ أَعْمَالَهُمْ ، ذَلِكَ بِأَنَّهُمْ كَرِهُوا مَا أَنْزَلَ اللهُ فَأَحْبَطَ أَعْمَالَهُمْ ، ﴾. [محمد: ٨،٩].

எவர்கள் நிராகரிக்கின்றார்களோ அவர்களுக்குக் கேடு தான். அவர்களுடைய செயல்களை அவன் வீணான தாக்கி விட்டான். அல்லாஹ் அருளியதை அவர்கள் வெறுத்துக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம். எனவே அவர்களது செயல்களை அவன் அழித்து விட்டான். (47:8,9)

41. அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகள் குறித்து உங்கள் மனங்களில் எந்த அதிருப்தியும் கொள் ளாதீர்கள். ஏனெனில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தம் இறைவனிடமிருந்து கொண்டு வந்த சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உங்களது விருப்பம் ஒத்துப்போகாத வரை உங்களது ஈமான் பரிபூரணமடையாது. எனவே அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையைச் செவியேற்போராகவும் அதற்குக் கட்டுப்படுவோராகவும் இருங்கள்.

﴿ فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّى يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنْفُسِهِمْ حَرَجًا مِمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا ﴾ [النساء:٦٥]

(நபியே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்று பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பு பற்றி தம் மனங்களில் எந்த அதிருப்தியும் கொள்ளாமல் (அதற்கு) முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக ஆகமாட்டார்கள். (4:65)

42. அல்லாஹ் ஹலாலாக்கியதை ஹராமாக்கவோ அல்லாஹ் ஹராமாக்கியதை ஹலாலாக்கவோ செய்யாதீர்கள். மேலும் மார்க்கத்தில் உள்ளது என உறுதியாகத் தெரிந்த விஷயத்தை மறுக்காதீர்கள். உதாரணமாக மது விலக்கு, தொழுகைக் கடமை ஆகியவை போன்று

﴿وَلَا تَقُولُوا لِمَا تَصِفُ أَلْسِنَتُكُمُ الْكَذِبَ هَذَا حَلَالٌ وَهَذَا حَرَامٌ لِتَفْتَرُوا عَلَى اللهِ الْكَذِبَ إِنَّ الَّذِينَ يَفْتَرُونَ عَلَى اللهِ الْكَذِبَ لَا يُفْلِحُونَ﴾ [النحل:١١٦]

இது அனுமதிக்கப்பட்டது; இது விலக்கப்பட்டது என்று உங்கள் நாவுகள் வர்ணிக்கும் பொய்யை அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிக் கூறாதீர்கள். அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டியோர் வெற்றி பெற மாட்டார்கள். (16:116)

43. ஹராமை ஹலாலாகவோ ஹலாலை ஹராமாகவோ ஆக்கும் விஷயத்தில் எந்த மனிதருக்கும் கட்டுப்படாதீர்கள். ஏனெனில் இந்த அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது. அல்லாஹ் எதை ஹலாலாக்கினானோ அதுவே ஹலால். அவன்

எதை ஹராமாக்கினானோ அதுவே ஹராம். அவன் எதை வகுத்துத் தந்துள்ளானோ அது மார்க்கமாகும்.

﴿اتَّخَذُوا أَحْبَارَهُمْ وَرُهْبَانَهُمْ أَرْبَابًا مِنْ دُونِ اللهِ﴾ [التوبة:٣١]

அவர்கள் அல்லாஹ்வை விடுத்து தமது மத போதகர் களையும் பாதிரிகளையும் கடவுள்களாக்கினர். (9:31)

عن عدي بن حاتم قال: أتيت النبي ﷺ وفي عنقي صليب من ذهب فقال يا عدي اطرح هذا الوثن من عنقك فطرحته فانتهيت إليه وهو يقرأ سورة براءة فقرأ هذه الآية ﴿اتَّخَذُوا أَحْبَارَهُمْ وَرُهْبَانَهُمْ أَرْبَابًا مِنْ دُونِ اللهِ﴾ [التوبة:٣١] حتى فرغ منها فقلت إنا لسنا نعبدهم فقال أليس يحرمون ما أحل الله فتحرمونه ويحلون ما حرم الله فتستحلونه قلت بلى قال فتلك عبادتهم (الطبراني- الكبير ١٧/ ٩٢ ، البيهقي الكبرى ١٠/ ١١٦، الترمذي / ٣٠٩٥)

அதீ இப்னு ஹாதிம் (ரலி) நபி(ஸல்) அவர்களிடம் வந்தார். (இவர் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் கிறிஸ்த வராக இருந்தார்.) “அவர்கள் அல்லாஹ்வை விடுத்து தமது மத போதகர்களையும், பாதிரிகளையும், கடவுள் களாக்கினர்”(9:31) எனும் வசனத்தை நபி(ஸல்) அவர்கள் ஓதுவதை செவியேற்றதும் “அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அவர்களை வணங்கிக் கொண்டிருக்க வில்லையே!” என்று கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “அல்லாஹ் ஹராமாக்கியதை அவர்கள் ஹலாலாக்கியபோது நீங்களும் அதை ஹலாலாக்கிக்

கொண்டீர்கள். அல்லாஹ் ஹலாலாக்கியதை அவர்கள் ஹராமாக்கியபோது நீங்களும் அதை ஹராமாக்கிக் கொண்டீர்கள் இல்லையா?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், “ஆம்” என்றார். “அதுதான் அவர்களை வணங்கியது” என்று நபி (ஸஸ்) அவர்கள் கூறினார்கள். (தப்பரானி கபீர் பாகம் 17, பக்கம் 92, பைஹகீ குப்ரா பாகம் 10, பக்கம் 116, திர்மிதி 3095)

44. இஸ்லாமும் முஸ்லிம்களும் வீழ்ச்சியடைவது குறித்தும், இணைவைப்பும் இணைவைப்பவர்களும் மேலோங்குவது குறித்தும் மகிழ்ச்சியடையாதீர்கள். அது இறைமார்க்க விஷயத்தில் ஆனாலும் சரி, உலக விவகாரத்தில் ஆனாலும் சரியே!

﴿إِنْ تُصِبْكَ حَسَنَةٌ تَسُؤْهُمْ وَإِنْ تُصِبْكَ مُصِيبَةٌ يَقُولُوا قَدْ أَخَذْنَا أَمْرَنَا مِنْ قَبْلُ وَيَتَوَلَّوْا وَهُمْ فَرِحُونَ﴾ [التوبة:٥٠]

நயவஞ்சகர்கள் குறித்து அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்: (நபியே!) உமக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அவர்களுக்கு அது துன்பத்தைத் தருகிறது. உமக்குச் சோதனை ஏற்பட்டால் “(நல்ல வேளை) முன்னரே கவனமாக இருந்து கொண்டோம்” என்று கூறி மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்கின்றனர். (9:50)

45. நிராகரிப்பாளர்களை உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அவர்களை நேசிப்பதோ அவர்களின் மதத்திற்கு பொருளால், உடலால்,பதவியால்

அல்லது தக்க ஆலோசனை கூறுவதன் மூலமோ உதவாதீர்கள். ஏனெனில் நீங்கள் அவர்களைச் சேர்ந்த வர்களாகி விடக்கூடாது. அப்படியானால் மறுமையில் அவர்களுடன்தான் எழுப்பப்படுவீர்கள்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَتَّخِذُوا عَدُوِّي وَعَدُوَّكُمْ أَوْلِيَاءَ تُلْقُونَ إِلَيْهِمْ بِالْمَوَدَّةِ﴾

[الممتحنة:١]

நம்பிக்கை கொண்டோரே! எனது பகைவரையும் உங்கள் பகைவரையும் நீங்கள் அன்பு செலுத்தும் உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். (60:1)

46. நிராகரிப்பாளர்களின் மதக் காரியங்களிலோ அவர்களுடைய கலாச்சாரங்களிலோ அவர்களுக்கே உரிய தனிப்பட்ட விஷயங்களிலோ நீங்கள் அவர்களுக்கு ஒப்பாக நடக்காதீர்கள்.

عَنْ ابْنِ عُمَرَ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ مَنْ تَشَبَّهَ بِقَوْمٍ فَهُوَ مِنْهُمْ (د/ ٤٠٣١) وصححه الألباني

“ஒரு கூட்டத்தினருக்கு ஒப்பாக யார் நடக்கிறாரோ அவர் அவர்களைச் சார்ந்தவரே” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: அபூதாவூத்(4031), அல்பானி இதை சரிகண்டுள்ளார்.

47. உங்கள் இறைமார்க்கத்தின் விஷயத்தில் தாழ்வு நிலையை அல்லது தாழ்வு மனப்பான்மையை மேற் கொள்ளாதீர்கள். (கொள்கையில்) விட்டுக் கொடுத்து

இணங்கிப் போகாதீர்கள். மேலும் தளர்ந்து விடாதீர்கள், துயரப்படாதீர்கள். ஏனெனில் கண்ணியம் என்பது அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் நம்பிக்கை யாளர்களுக்கும் உரியது.

﴿وَلَا تَهِنُوا وَلَا تَحْزَنُوا وَأَنْتُمُ الأَعْلَوْنَ إِنْ كُنْتُمْ مُؤْمِنِينَ﴾ [ آل عمران:١٣٩ ]

தளர்ந்து விடாதீர்கள்; கவலைப்படாதீர்கள் நீங்கள் மு.ஃ.மின்களாக இருந்தால் நீங்களே உயர்ந்தவர்கள்! (3:139)

48. இறைமறுப்பாளர்கள் காபிர்கள்- நிராகரிப்பா ளர்கள் தாம் என்பதில் சந்தேகம் கொள்ளாதீர்கள், அவர்களது வழிமுறையை சரிகாணாதீர்கள், அவர்களது வழிமுறைக்கு உதவவோ அல்லது அதற்கு பாதுகாப்பு அளிக்கவோ செய்யாதீர்கள். காரணம் நீங்கள் அவர் களைச் சேர்ந்தவர்களாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக.

﴿أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ أُوتُوا نَصِيبًا مِنَ الكِتَابِ يُؤْمِنُونَ بِالجِبْتِ وَالطَّاغُوتِ وَيَقُولُونَ لِلَّذِينَ كَفَرُوا هَؤُلَاءِ أَهْدَى مِنَ الَّذِينَ آمَنُوا سَبِيلًا، أُولَئِكَ الَّذِينَ لَعَنَهُمُ اللهُ وَمَنْ يَلْعَنِ اللهُ فَلَنْ تَجِدَ لَهُ نَصِيرًا﴾ [النساء: ٥٢،٥١]

(நபியே!) வேதம் எனும் பாக்கியம் அருளப்பட்டோரை நீர் அறியவில்லையா? அவர்கள் சிலைகளையும் தீய சக்திகளையும் நம்புகின்றனர். நிராகரிப்பாளர்களைப் பற்றி (கூறும்போது) “இவர்கள் நம்பிக்கை கொண்டோரை விட நேர்வழியில் உள்ளவர்கள்” எனக் கூறுகின்றனர்.

இப்படிப்பட்டவர்களை அல்லாஹ் சபித்து விட்டான். எவர் களை அல்லாஹ் சபித்துவிட்டனோ அவர்களுக்கு உதவு பவனை நீர் காணவே முடியாது. (4:51,52)

49. இறைநிராகரிப்பாளர்களின் பண்டிகைகளிலும் அவர்களின் மத நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளா தீர்கள். அதற்காக அவர்களுக்கு உதவவோ அதனை ஒட்டி அவர்களுக்கு வாழ்த்துக் கூறவோ செய்யாதீர்கள். இது அவர்களின் மதத்தை நீங்கள் ஏற்றுக் கொண்ட தாகிவிடும்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا قَاتِلُوا الَّذِينَ يَلُونَكُمْ مِنَ الكُفَّارِ وَلْيَجِدُوا فِيكُمْ غِلْظَةً وَاعْلَمُوا أَنَّ اللهَ مَعَ الْمُتَّقِينَ﴾ [التوبة:١٢٣]

நம்பிக்கை கொண்டோரே! உங்களை அடுத்திருக்கும் நிராகரிப்பாளர்களுடன் போரிடுங்கள். உங்களிடம் கடுமையை அவர்கள் காணட்டும். (தன்னை) அஞ்சுவோ ருடனேயே அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (9:123)

50. இறைமார்க்கத்தைப் படிக்காமலும் அதன்படி அமல் செய்யாமலும் புறக்கணிக்காதீர்கள்.

﴿وَمَنْ أَظْلَمُ مِمَّنْ ذُكِّرَ بِآيَاتِ رَبِّهِ ثُمَّ أَعْرَضَ عَنْهَا إِنَّا مِنَ الْمُجْرِمِينَ مُنْتَقِمُونَ﴾

தமது இறைவனின் வசனங்கள் மூலம் அறிவுரை கூறப்பட்டு பின்னர் அதைப் புறக்கணித்தவனை விட

அநீதி இழைத்தவன் யார்? நாம் குற்றவாளிகளைத் தண்டிப்போம். (32:22)

51. சூனியத்தில் ஈடுபடாதீர்கள்! அது ஷைத்தானியச் செயல்பாடாகும். இறைநம்பிக்கைக்கு எதிரான இறை மறுப்புச் செயலாகும்.

﴿وَاتَّبَعُوا مَا تَتْلُو الشَّيَاطِينُ عَلَى مُلْكِ سُلَيْمَانَ وَمَا كَفَرَ سُلَيْمَانُ وَلَكِنَّ الشَّيَاطِينَ كَفَرُوا يُعَلِّمُونَ النَّاسَ السِّحْرَ وَمَا أُنْزِلَ عَلَى الْمَلَكَيْنِ بِبَابِلَ هَارُوتَ وَمَارُوتَ وَمَا يُعَلِّمَانِ مِنْ أَحَدٍ حَتَّى يَقُولَا إِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا تَكْفُرْ﴾ [البقرة:١٠٢]

சுலைமானின் ஆட்சியில் ஷைத்தான்கள் ஓதியவற்றையே பின்பற்றினார்கள். ஆனால் சுலைமான் நிராகரித்தவர் அல்லர். ஷைத்தான்கள் தாம் நிராகரித்தவர்கள். அவர்கள் தாம் மனிதர்களுக்கு சூனியத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். இன்னும் பாபில் நகரத்தில் ஹாரூத், மாரூத் என்ற இரு மலக்குகளுக்கு இறக்கப்பட்டதையும் (தவறான வழியில் பிரயோகிக்கக் கற்றுக் கொடுத்தார்கள்.) ஆனால் அவர்கள் (மலக்குகள்) இருவரும், “நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம். இதைக் கற்று நீ கா∴பிராகிவிடாதே” என்று கூறாமல் எவருக்கும் இ(ந்த சூனியத்)தைக் கற்றுக் கொடுப்பதில்லை. (2:102)

52. குறிகாரன், ஜோசியக்காரன், சூனியக்காரன், நட்சத்திர ஜோதிடன், கைரேகை அல்லது சாஸ்திரம் பார்ப்பவன் ஆகியோரிடம் செல்லாதீர்கள்.

قَالَ النبي ﷺ مَنْ أَتَى عَرَّافًا فَسَأَلَهُ عَنْ شَيْءٍ لَمْ تُقْبَلْ لَهُ صَلَاةٌ أَرْبَعِينَ لَيْلَةً (م/ ٢٢٣٠)

“யாரேனும் குறிகாரனிடம் சென்று எதைப் பற்றியேனும் குறி கேட்டால் அவனது நாற்பது நாட்கள் தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 2230)

53. குறிகாரனையோ மறைவானவற்றை அறிவதாகச் சொல்பவனையோ நம்பாதீர்கள். ஏனெனில் அவர்களிடம் செல்வதும் அவர்கள் கூறுவதை நம்புவதும் நபி(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வஹி எனும் இறையருட் செய்தியை மறுப்பதாகும்.

عن أبي هريرة قال قال رسول الله ﷺ:من أتى عرافا أو كاهنا فصدقه فيما يقول فقد كفر بما أنزل على محمد ﷺ (جه/ ٦٣٩، د/ ٣٩٠٤، ك١/ ١٨، حم/ ٩١٧١،٩٧٧٩)

“யாரேனும் குறிகாரனிடம் சென்று அவன் கூறுவதை நம்பினால் அவன் முஹம்மதுக்கு இறைக்கியருளப் பட்டதை நிராகரித்தவனாவான்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: இப்னுமாஜா 639, அபூதாவூது 3904, அஹ்மத் 9779, அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

54. நட்சத்திரங்களிள் மூலம் மழையை வேண்டா தீர்கள். ஜாதகத்தின் மீதும் சாஸ்திரத்தின் மீதும் நட்சத் திரங்கள் மீதும் நம்பிக்கை வைக்காதீர்கள்.

عن أَبِي مَالِكٍ الْأَشْعَرِيَّ حَدَّثَهُ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ أَرْبَعٌ فِي أُمَّتِي مِنْ أَمْرِ الْجَاهِلِيَّةِ لَا يَتْرُكُونَهُنَّ الْفَخْرُ فِي الْأَحْسَابِ وَالطَّعْنُ فِي الْأَنْسَابِ وَالْاسْتِسْقَاءُ بِالنُّجُومِ وَالنِّيَاحَةُ (م/ ٩٣٤)

“என் சமுதாயத்தில் காணப்படும் நான்கு காரியங்கள் அறியாமைக் காலத்து வழிகேடாகவும் தீய குணங் களாகவும் உள்ளன. அவற்றை அவர்கள் விட்டொழிப் பதில்லை. அவை, குலப் பெறுமை பேசுவது, பரம்ப ரையைக் குறை கூறுவது, நட்சத்திரங்கள் மூலம் மழையை வேண்டுவது, ஒப்பாரி வைப்பது ஆகியன வாகும்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூமாலிக்(ரலி), நூல்: முஸ்லிம் (934)

55. இன்ன நட்சத்திரத்தினால்தான் மழை பொழிந்தது என்று கூறாதீர்கள். இவ்வாறு கூறுவது மழை பொழிவதை நட்சத்திரங்களுடன் சம்பந்தப்படுத்துவதாகும்.

عَنْ زَيْدِ بْنِ خَالِدٍ الْجُهَنِيِّ قَالَ صَلَّى بِنَا رَسُولُ اللهِ ﷺ صَلَاةَ الصُّبْحِ بِالْحُدَيْبِيَةِ فِي إِثْرِ السَّمَاءِ كَانَتْ مِنْ اللَّيْلِ فَلَمَّا انْصَرَفَ أَقْبَلَ عَلَى النَّاسِ فَقَالَ هَلْ تَدْرُونَ مَاذَا قَالَ رَبُّكُمْ قَالُوا اللهُ وَرَسُولُهُ أَعْلَمُ قَالَ قَالَ أَصْبَحَ مِنْ عِبَادِي مُؤْمِنٌ بِي وَكَافِرٌ فَأَمَّا مَنْ قَالَ مُطِرْنَا بِفَضْلِ اللهِ وَرَحْمَتِهِ فَذَلِكَ مُؤْمِنٌ بِي كَافِرٌ بِالْكَوْكَبِ وَأَمَّا مَنْ

قَالَ مُطِرْنَا بِنَوْءِ كَذَا وَكَذَا فَذَلِكَ كَافِرٌ بِي مُؤْمِنٌ بِالْكَوْكَبِ (خ/ ٨٤٦، م/ ٧١)

ஸைத் பின் காலித்(ரலி) அறிவிப்பதாவது: நபி(ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா எனுமிடத்தில் எங்களுக்கு சுப்ஹு தொழுவித்தார்கள். அன்றிரவு இரவு மழை பெய்திருந்தது. பின் தொழுது முடித்ததும் மக்களை நோக்கி, “உங்கள் இறைவன் என்ன கூறினான் என அறிவீர்களா?” என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், “அல்லாஹ்வும் அவன் தூதருமே நன்கறிந்தவர்கள்” என்றனர். அப்போது நபி(ஸல்)அவர்கள், “என் அடியார்களில் என்னை நம்பியவர்களும் என்னை நிராகரிப்பவர்களும் இருக்கின்றனர். யார் அல்லாஹ்வின் அருளால் அவனது கருணையால் எங்களுக்கு மழை பொழிந்தது என்று கூறுகிறாரோ அவரே என்னை நம்பியவர்; நட்சத்திரங்களை நிராகரித்தவர். இன்னின்ன நட்சத்திரங்களால் எங்களுக்கு மழை பொழிந்தது என்று யார் கூறுகிறாரோ அவர் என்னை நிராகரித்து நட்சத்திரங்களை நம்பியவர்” என்று அல்லாஹ் கூறினான் எனக் குறிப்பிட்டார்கள். நூல்: புகாரி (846), முஸ்லிம்(71)

56. பறவைகள், மனிதர்கள், பெயர்கள், வார்த்தைகள், இடங்கள், நிகழ்வுகள், எண்கள், நிறங்கள், மாதங்கள், நாட்கள், நேரங்கள் போன்ற எதனைக் கொண்டும் சகுனம் பார்க்கவோ இவைகளை அபசகுனமாகக் கருதவோ செய்யாதீர்கள். ஏனெனில் நமக்கு தீங்கி

ழைக்கவோ நன்மை செய்யவோ அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் முடியாது.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ لَا عَدْوَى وَلَا طِيَرَةَ وَلَا هَامَةَ وَلَا صَفَرَ (خ/ ٥٧٥٧)

“தொற்று நோய் என்பதில்லை. அபசகுனம், ஆந்தை சகுனம் என்பதில்லை. ஸ∴பர் மாதத்தைப் பீடையாகக் கருதுவதும் இல்லை” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(5757)

57. விதியை- அதில் நல்லதையும் கெட்டதையும் பொய்ப்படுத்தாதீர்கள். ஏனெனில் விதி என்பது தனது படைப்பினங்களில் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள ஓர் இரகசியமாகும். அல்லாஹ் அறிந்ததும், நாடியதும், அவன் எழுதியதும், படைத்ததும்தான் அவனுடைய இப்பிரபஞ்சத்தில் நடக்கின்றது.

((لَوْ أَنَّ اللهَ عَذَّبَ أَهْلَ سَمَاوَاتِهِ وَأَهْلَ أَرْضِهِ عَذَّبَهُمْ وَهُوَ غَيْرُ ظَالِمٍ لَهُمْ وَلَوْ رَحِمَهُمْ كَانَتْ رَحْمَتُهُ خَيْرًا لَهُمْ مِنْ أَعْمَالِهِمْ وَلَوْ أَنْفَقْتَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا فِي سَبِيلِ اللهِ مَا قَبِلَهُ اللهُ مِنْكَ حَتَّى تُؤْمِنَ بِالْقَدَرِ وَتَعْلَمَ أَنَّ مَا أَصَابَكَ لَمْ يَكُنْ لِيُخْطِئَكَ وَأَنَّ مَا أَخْطَأَكَ لَمْ يَكُنْ لِيُصِيبَكَ وَلَوْ مُتَّ عَلَى غَيْرِ هَذَا لَدَخَلْتَ النَّارَ )) (د/ ٤٦٩٩، جه/ ٧٧) وصححه الألباني

“வானங்களில் உள்ளவர்களையும், பூமியிலுள்ளவர் ளையும் அல்லாஹ் தண்டிக்க வேண்டுமெனில் அவர் ளைத் தண்டித்தே தீருவான். அவர்களுக்கு அநீதிழைக்க

மாட்டான். அவன் கருணை காட்டினால் அது அவர்கள் செய்த அமல்களை விட அவர்களுக்கு சிறந்ததாக இருக்கும். உஹது மலை அளவு தங்கத்தை அல்லாஹ் வுடைய வழியில் நீர் செலவு செய்தாலும் விதியை நீர் நம்பாத வரையில் அல்லாஹ் அதை உம்மிடமிருந்து ஏற்றுக் கொள்ள மாட்டான். மேலும் "என்னென்ன துன்பங்கள், நன்மைகள் உம்மை அடைந்தனவோ அவை உம்மை விட்டும் தவறக்கூடியவை அல்ல. என்னென்ன துன்பங்கள், நன்மைகள் உம்மை விட்டும் தவறினவோ அவை அடைவதற்குரியவை அல்ல" என்பதை நீர் உறுதியாக அறியாதவரையில் உம்மிடமிருந்து ஏற்றுக் கொள்ள மாட்டான். இந்த விதியை ஏற்காத நிலையில் நீ மரணித்துவிட்டால் நரகத்தில் நுழைவாய்" என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸைத் பின் ஸாபித் (ரலி) அறிவிக்கிறார்கள். நூல்: அபூதாவூது(4699), இப்னுமாஜா (77), அல்பானி இதை சரிகண்டுள்ளார்.

58. அல்லாஹ்வுடைய விதி குறித்து அதிருப்தி கொள் ளாதீர்கள். என்னென்ன துன்பங்கள், நன்மைகள் உம்மை அடைந்தனவோ அவை உம்மை விட்டும் தவறக் கூடியவை அல்ல. என்னென்ன துன்பங்கள், நன்மைகள் உம்மை விட்டும் தவறினவோ அவை அடைவதற் குரியவை அல்ல. திண்ணமாக அல்லாஹ் நிர்ணயிப் பதிலும் நிர்வகிப்பதிலும் நுண்ணறிவாளன்" என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

عَنْ أَنَسٍ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ إِنَّ عِظَمَ الْجَزَاءِ مَعَ عِظَمِ الْبَلَاءِ وَإِنَّ الله إِذَا أَحَبَّ قَوْمًا ابْتَلَاهُمْ فَمَنْ رَضِيَ فَلَهُ الرِّضَا وَمَنْ سَخِطَ فَلَهُ السَّخَطُ (ت/ ٢٣٩٦، جه/ ٤٠٣١) حسنه الألباني

“மிகப் பெரும் சோதனையில் தான் மகத்தான கூலி இருக்கிறது. ஒரு சமுதாயத்தை அல்லாஹ் நேசித்தால் அவர்களை சோதிப்பான். யார் (அதனைப்) பொருந்திக் கொள்கிறாரோ அவருக்கு (அல்லாஹ்வின்) பொருத்தம் உண்டு. யார் (அதனை) அதிருப்தி கொள்கிறாரோ அவருக்கு (அல்லாஹ்வின்) அதிருப்தி உண்டு” என நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: திர்மிதி 2396, இப்னுமாஜா 4031, இதனை அல்பானி ஹஸன் எனக் கூறியுள்ளார்கள்.

59. குற்றங் குறைகளைச் செய்வதற்கும், பாவங்கள் புரிவதற்கும் விதியை ஆதாரமாகக் காட்டாதீர்கள். மேலும் “அல்லாஹ் எனக்கு நேர்வழி காட்டியிருந்தால் நான் இறைச்சமுடையோரில் ஒருவராக இருந்திருப்பேன்” என்று கூறாதீர்கள். ஆயினும் துன்பங்களுக்கும் வேதனை களுக்கும் விதியை ஆதாரமாகக் காட்டலாம்.

﴿أَنْ تَقُولَ نَفْسٌ يَا حَسْرَتَا عَلَى مَا فَرَّطْتُ فِي جَنْبِ الله وَإِنْ كُنْتُ لَمِنَ السَّاخِرِينَ ، أَوْ تَقُولَ لَوْ أَنَّ اللهَ هَدَانِي لَكُنْتُ مِنَ الْمُتَّقِينَ ، أَوْ تَقُولَ حِينَ تَرَى العَذَابَ لَوْ أَنَّ لِي كَرَّةً فَأَكُونَ مِنَ الْمُحْسِنِينَ ، بَلَى قَدْ جَاءَتْكَ آيَاتِي فَكَذَّبْتَ بِهَا

وَاسْتَكْبَرْتَ وَكُنْتَ مِنَ الكَافِرِينَ ، ﴾. [الزُّمر:٥٦-٥٩].

“அல்லாஹ்வின் விஷயத்தில் நான் குறைபாடு செய்து விட்டேனே எனக்குக் கேடுதான்; அதுமட்டுமின்றி பரிகாசம் செய்பவர்களில் நானும் ஒருவனாகிவிட்டேனே!” என்றோ “அல்லாஹ் எனக்கு நேர்வழிகாட்டியிருந்தால் (அவனை) அஞ்சுவோரில் நானும் ஒருவனாக ஆகியிருப்பேனே” என்றோ வேதனையைக் காணும் நேரத்தில் “(உலகத் திற்கு) திரும்புதல் எனக்கு இருந்தால் நல்லோரில் ஒருவனாக ஆகியிருப்பேனே” என்றோ எவரும் கூறாமல் இருப்பதற்காக. (அல்குர்ஆன் 39:56-59)

60. நான் இப்படிச் செய்திருந்தால் இப்படி ஆகி யிருக்குமே என்று கூறாதீர்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ الْمُؤْمِنُ الْقَوِيُّ خَيْرٌ وَأَحَبُّ إِلَى الله مِنْ الْمُؤْمِنِ الضَّعِيفِ وَفِي كُلٍّ خَيْرٌ احْرِصْ عَلَى مَا يَنْفَعُكَ وَاسْتَعِنْ بِالله وَلَا تَعْجَزْ وَإِنْ أَصَابَكَ شَيْءٌ فَلَا تَقُلْ لَوْ أَنِّي فَعَلْتُ كَانَ كَذَا وَكَذَا وَلَكِنْ قُلْ قَدَرُ الله وَمَا شَاءَ فَعَلَ فَإِنَّ لَوْ تَفْتَحُ عَمَلَ الشَّيْطَانِ (م/ ٢٦٦٤)

பலமான மு∴மின் பலவீனமான மு∴மினை விடச் சிறந்தவன்; அல்லாஹ்வுக்குப் பிரியமானவன். ஒவ்வொரு வரிடமும் நன்மை இருக்கிறது. எனவே உனக்குப் பயன ளிக்கும் விஷயங்களில் ஆர்வம்கொள். அல்லாஹ்விடம் உதவியும் தேடு. இயலாமலாகிவிடாதே! உனக்கு ஏதும் நிகழ்ந்துவிட்டால் “நான் இப்படிச் செய்திருந்தால் இப்படி

ஆகியிருக்குமே! என்று கூறாதே! மாறாக அல்லாஹ் விதித்தது நடந்துள்ளது. அவன் நாடியதைச் செய்து உள்ளான்” என்று கூறு. ஏனெனில் “இப்படிச் செய்தி ருந்தால்” எனும் நிபந்தனைச் சொல் ஷைத்தானின் செயல்பாட்டிற்கு வழி திறந்துவிடலாம்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபுஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம் (2764)

61. இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) எனச் சொல்லாமல் நாளை நான் இதைச் செய்வேன் என்று எதைப் பற்றியும் கூறாதீர்கள்.

﴿ وَلَا تَقُولَنَّ لِشَيْءٍ إِنِّي فَاعِلٌ ذَلِكَ غَدًا ، إِلَّا أَنْ يَشَاءَ اللهُ ﴾. [الكهف: ٢٣،٢٤]

அல்லாஹ் நாடினால் (என்பதைச் சேர்த்தே) தவிர நாளை நான் இதைச் செய்பவன் என்று எதைப் பற்றியும் கூறாதீர். (அல்குர்ஆன் 18:23,24)

62. உங்களை விடுத்து வேறு ஒருவருக்கு அல்லாஹ் அளித்திருக்கின்ற சிறப்பில் பேராசை கொள்ளாதீர்கள். அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய பங்கைப் பொருந்திக் கொள்ளுங்கள்.

﴿ وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللهُ بِهِ بَعْضَكُمْ عَلَى بَعْضٍ لِلرِّجَالِ نَصِيبٌ مِمَّا اكْتَسَبُوا وَلِلنِّسَاءِ نَصِيبٌ مِمَّا اكْتَسَبْنَ وَاسْأَلُوا اللهَ مِنْ فَضْلِهِ إِنَّ اللهَ كَانَ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا ﴾

[النساء:٣٢].

உங்களில் சிலரை விட சிலருக்கு அல்லாஹ் சிறப்பு அளித்தியிருப்பதில் பேராசை கொள்ளாதீர்கள். ஆண் களுக்கு அவர்கள் பாடுபட்டதிற்கேற்ப பங்கு உண்டு. பெண்களுக்கு அவர்கள் பாடுபட்டதிற்கு ஏற்ப பங்குண்டு. அல்லாஹ்விடம் அவனது அருளை வேண்டுங்கள். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4:32)

63. அல்லாஹ்வின் அருட்கொடையை மறுப்பதன் மூலமும் அவனல்லாத வேறொருவர் அதனை வழங்கி யதாகக் கூறுவதன் மூலமும் அதற்கு நன்றி கொல்லா தீர்கள். அல்லது அருட்கொடையை வழங்கியதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி அவனை நினைவு கூரும் கடமையை நிறைவேற்றாமலிருக்காதீர்கள்.

﴿ وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ وَلَئِنْ كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ ﴾ [إبراهيم:٧]

“நீங்கள் நன்றி செலுத்தினால் உங்களுக்கு அதிகமாக வழங்குவேன். நீங்கள் நன்றி மறந்தால் எனது வேதனை கடுமையானது” என்று உங்கள் இறைவன் பிரகடனம் செய்ததை எண்ணிப் பாருங்கள். (14:7)

64. அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்யா தீர்கள். உதாரணமாக கஅபா, நபி, சிறப்பு, கண்ணியம், பொறுப்பு, புனிதம், ஒருவரது வாழ்வு, ஒருவரது தலை ஆகியவற்றின் மீது சத்தியம் செய்வது போல.

عَنْ ابْنِ عُمَرَ عن النبي ﷺ قال: أَلَا إِنَّ الله يَنْهَاكُمْ أَنْ تَحْلِفُوا بِآبَائِكُمْ فَمَنْ كَانَ حَالِفًا فَلْيَحْلِفْ بِالله وَإِلَّا فَلْيَصْمُتْ (خ/ ٦١٠٨، م/ ١٦٤٦)

“அறிந்து கொள்ளுங்கள்! உங்கள் தந்தையர் மீது நீங்கள் சத்தியம் செய்வதை அல்லாஹ் தடைசெய்கின்றான். எனவே யாரேனும் சத்தியம் செய்வதாக இருந்தால் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யட்டும். இல்லையெனில் வாய் மூடி இருக்கட்டும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரி (6108), முஸ்லிம் (1646)

65. அமானிதத்தைக் கொண்டு சத்தியம் செய்தீர்கள்.

عَنْ بُرَيْدَةَ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ مَنْ حَلَفَ بِالْأَمَانَةِ فَلَيْسَ مِنَّا (د/ ٣٢٥٣) صححه الألباني

“அமானிதத்தைக் கொண்டு சத்தியம் செய்தவர் நம்மைச் சார்ந்தவரல்லர்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: புரைதா(ரலி), நூல்: அபூதாவூது (3253), அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

65. அல்லாஹ்வைக் கொண்டு அதிகமதிகம் சத்தியம் செய்யாதீர்கள்.ஏனெனில் அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் சாதாரணமாகவும் அலட்சியமாகவும் கருதுவதன் பால் அது உங்களைக் கொண்டு சென்று விடக் கூடாது!

﴿ وَاحْفَظُوا أَيْمَانَكُمْ .... ﴾ [المائدة:٨٩]

உங்கள் சத்தியங்களைப் பேணிக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 5:89)

66. உங்களிடம் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்தவரின் சத்தியத்தை நிராகரிக்காதீர்கள். அல்லாஹ்வை மகத்துவப்படுத்துவதற்காக அவரது சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் பாவமான காரியங்களிலோ உங்களால் இயலாத காரியங்களிலோ அவர் சத்தியம் செய்தாலே தவிர.

عَنْ ابْنِ عُمَرَ قَالَ سَمِعَ النَّبِيُّ ﷺ رَجُلًا يَحْلِفُ بِأَبِيهِ فَقَالَ لَا تَحْلِفُوا بِآبَائِكُمْ مَنْ حَلَفَ بِاللهِ فَلْيَصْدُقْ وَمَنْ حُلِفَ لَهُ بِاللهِ فَلْيَرْضَ وَمَنْ لَمْ يَرْضَ بِاللهِ فَلَيْسَ مِن اللهِ (جه/ ٢١٠١) صححه الألباني

ஒரு மனிதர் தமது தந்தை மீது சத்தியம் செய்வதை நபி(ஸல்)அவர்கள் செவியுற்றதும் “உங்கள் தந்தையர் மீது சத்தியம் செய்யாதீர்கள். ஒருவர் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்தால் அதில் உண்மையாக நடந்து கொள்ளட்டும். ஒருவரிடம் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்யப்பட்டால் அதனை அவர் பொருந்திக் கொள்ளட்டும். அல்லாஹ்வைப் பொருந்திக் கொள்ளாதவர், அல்லாஹ்வுக்கு நெருக்கமானவரல்லர்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: இப்னுமாஜா 2101, அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

67. அல்லாஹ் வழங்கியிருக்கும் எந்த அருட்கொடையையும் அவனுக்குச் சிரமமானது என எண்ணிவிடாதீர்கள். ஏனெனில் அவனது படைப்பினங்களின் எந்தத் தேவையும் அவனை சிரமப்படுத்தவோ இயலாமலாக்கவோ முடியாது. அத்தேவையை நிறைவேற்றியே ஆகவேண்டுமென எதுவும் அவனை நிர்பந்தப்படுத்தவும் முடியாது.

عَن أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ لَا يَقُلْ أَحَدُكُمْ اللَّهُمَّ اغْفِرْ لِي إِنْ شِئْتَ ارْحَمْنِي إِنْ شِئْتَ ارْزُقْنِي إِنْ شِئْتَ وَلِيَعْزِمْ مَسْأَلَتَهُ إِنَّهُ يَفْعَلُ مَا يَشَاءُ لَا مُكْرِهَ لَهُ (خ/ ٧٤٧٧، م/ ٢٦٧٩) واللفظ للبخاري وفي رواية لمسلم قَالَ إِذَا دَعَا أَحَدُكُمْ فَلَا يَقُلْ اللَّهُمَّ اغْفِرْ لِي إِنْ شِئْتَ وَلَكِنْ لِيَعْزِمْ الْمَسْأَلَةَ وَلْيُعَظِّمْ الرَّغْبَةَ فَإِنَّ اللهَ لَا يَتَعَاظَمُهُ شَيْءٌ أَعْطَاهُ (م/ ٢٦٧٩)

“இறைவா! நீ நாடினால் என்னை மன்னித்துவிடு! நீ நாடினால் எனக்கு அருள் புரி! நீ நாடினால் எனக்கு ரிஸ்க் அளி! என்று உங்களில் யாரும் கூற வேண்டாம். (அல்லாஹ்விடம்) அவர் கேட்பதை உறுதியுடன் கேட்கட்டும். ஏனெனில் அவன் நாடியதைச் செய்பவன். அவனை யாரும் நிர்பந்திக்க முடியாது” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி (7477), முஸ்லிம் (2679)

முஸ்லிமிலுள்ள மற்றொரு அறிவிப்பில், உங்களில் யாரும் பிரார்த்தித்தால் “இறைவா! நீ நாடினால் என்னை

மன்னித்துவிடு” என்று கூற வேண்டாம். மாறாக தான் கேட்பதை உறுதியுடனும் தனது விருப்பத்தை பெரிதாக்கியும் கேட்கட்டும். ஏனெனில் தான் கொடுக்கின்ற எதுவும் அவனைச் சிரமப்படுத்த முடியாது” என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக உள்ளது. (முஸ்லிம் 2679)

68. தொழுகையை நிலைநாட்டக்கூடிய முஸ்லிம்களில் யாரையும் அவர் செய்யும் பாவத்திற்காக கா.ஃபிர் என்று கூறாதீர்கள். பாவம் புரிவதை ஹலால்- ஆகுமானதே என்று அவர் கருதாத வரை அவ்வாறு கூறாதீர்கள்.

عَن ابْنَ عُمَرَ قَالَ رَسُولُ الله ﷺ أَيُّمَا امْرِئٍ قَالَ لِأَخِيهِ يَا كَافِرُ فَقَدْ بَاءَ بِهَا أَحَدُهُمَا إِنْ كَانَ كَمَا قَالَ وَإِلَّا رَجَعَتْ عَلَيْهِ (م/ ٦٠)

“எந்த மனிதரும் தன் சகோதரனைக் குறித்து கா.ஃபிர் என்று சொன்னால் அவ்விருவரில் ஒருவர் அதற்குத் தகுதியாக இருந்தால் அவர் அவ்வாறு ஆகிவிடுவார். இல்லையெனில் அது சொன்னவர் மீதே திரும்பிவிடும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: முஸ்லிம்(60)

69. அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து ‘இவர் சொர்க்கவாசி’ என்றோ ‘நரகவாசி’ என்றோ யாரைப் பற்றியும் கூறாதீர்கள். வஹி எனும் அல்லாஹ்வின் வாக்கு அவ்வாறு ஒருவரைக் குறிப்பிட்டுச் சொன்னாலே தவிர.

عَنْ جُنْدَبٍ أَنَّ رَسُولَ الله ﷺ حَدَّثَ أَنَّ رَجُلًا قَالَ وَالله لَا يَغْفِرُ الله لِفُلَانٍ وَإِنَّ الله تَعَالَى قَالَ مَنْ ذَا الَّذِي يَتَأَلَّى عَلَيَّ أَنْ لَا أَغْفِرَ لِفُلَانٍ فَإِنِّي قَدْ غَفَرْتُ لِفُلَانٍ وَأَحْبَطْتُ عَمَلَكَ أَوْ كَمَا قَالَ (م/ ٢٦٢١)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இன்னாரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான்” என்று ஒருவர் கூறினார். ஆனால் அல்லாஹ் கூறினான்: “இன்னாரை நான் மன்னிக்க மாட்டேன்” என்று என் மீது சத்தியம் செய்து யார் கூறுகிறாரோ அவர் அறிந்து கொள்ளட்டும்: “நிச்சயமாக நான் அந்த மனிதரை மன்னித்து விட்டேன். உனது (நற்) செயலை அழித்து விட்டேன்.” அறிவிப்பவர்: ஜுன்துப்(ரலி), ((முஸ்லிம் 2621)

70. நபித்தோழர்களைத் திட்டாதீர்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக! மறுமையில் அவர்களின் கூட்டத்தில் நம்மை எழுப்பு வானாக! அவர்களைச் சபிப்போரை அல்லாஹ் சபிப்பா னாக. அவர்களைத் திட்டுவோர் மீது அல்லது அவர்களை அவமதிப்போர் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டா வதாக! ஏனெனில் நபிமார்களுக்குப் பிறகு நபித்தோழர் கள்தான் எல்லா மனிதர்களை விடவும் சிறந்தவர்கள்! தனது தூதருடன் தோழமை கொள்வதற்காக தனது அறிவு ஞானத்தின் மூலம் அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ لَا تَسُبُّوا أَصْحَابِي لَا تَسُبُّوا أَصْحَابِي فَوَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَوْ أَنَّ أَحَدَكُمْ أَنْفَقَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا مَا أَدْرَكَ مُدَّ أَحَدِهِمْ وَلَا نَصِيفَهُ (م/ ٢٥٤٠)

“என் தோழர்களைத் திட்டாதீர். ஏனெனில் என் உயிர் எவன் கை வசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக! உங்களில் ஒருவர் உஹத் மலை அளவு தங்கத்தை (இறைவழியில்) செலவு செய்தாலும் என் தோழர்களில் ஒருவர் செலவு செய்த இரு கை சிறங்கை அளவு அல்லது அதில் பாதி அளவைக்கூட அவரால் அடைந்து விட முடியாது” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம் (2540)

71. இறைத்தூதரின் குடும்பத்திலுள்ள ஒரு நல்ல மனிதரை வெறுக்காதீர்கள். ஏனெனில் அவர்களை நேசிப்பது இறைமார்க்கத்தின் ஓர் அம்சமாகும். அவர்கள் விஷயத்தில் மிகைப்படுத்தாமலும் வரம்பு மீறாமலும் அவர்களைக் கண்ணியப்படுத்துவது இஸ்லாத்தின் கொள்கை சார்ந்த விஷயமாகும்.

عن أبي سعيد الخدري قال قال رسول الله ﷺ والذي نفسي بيده لا يبغضنا أهل البيت أحد إلا أدخله الله النار (ك ٣ / ١٦٢، حب ١٥ / ٤٣٥، السلسلة الصحيحة (٢٤٨٨) ٥/ ٦٤٣)

“என் உயிர் எவன் கை வசம் உள்ளதோ அவன் மீது

சத்தியமாக! இறைத்தூதரின் குடும்பத்தினரான எங்களை யாரேனும் வெறுத்தால் அவரை அல்லாஹ் நரகில் புகுத்தியே தீருவான்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), நூல்: ஹாகிம் பாகம் 3, பக்கம் 162, இப்னு ஹிப்பான் பா 15, பக் 435, அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

72. முஸ்லிம்களில் யாரைப் பற்றியும் "இவர் இறை மார்க்கத்தை விட்டும் வெளியேறிவிட்டார்" (ஃபாஸிக்) என்று கூறாதீர்கள். இது பற்றி அல்லாஹ்விடமிருந்து தெளிவான சான்று உங்களிடம் கிடைக்கும் வரை.

عَنْ أَبِي ذَرٍّ أَنَّهُ سَمِعَ النَّبِيَّ ﷺ يَقُولُ لَا يَرْمِي رَجُلٌ رَجُلًا بِالْفُسُوقِ وَلَا يَرْمِيهِ بِالْكُفْرِ إِلَّا ارْتَدَّتْ عَلَيْهِ إِنْ لَمْ يَكُنْ صَاحِبُهُ كَذَلِكَ (خ/ ٦٠٤٥)

"ஒரு மனிதர் இன்னொரு மனிதரைக் குறித்து- இவர் இறைமார்க்கத்தை விட்டும் வெளியேறியவர் என்றோ காஃபிர் என்றோ கூற வேண்டாம். அவ்வாறு கூறி, அவர் அப்படி இல்லையெனில் அது சொன்னவர் மீதே திரும்பி விடும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதர்(ரலி), நூல்: புகாரி 6045

73. எந்த முஸ்லிமைப் பார்த்தும் "அல்லாஹ்வின் விரோதியே!' என்று கூறாதீர்கள்.

عَنْ أَبِي ذَرٍّ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ لَيْسَ مِنْ رَجُلٍ ادَّعَى لِغَيْرِ أَبِيهِ وَهُوَ يَعْلَمُهُ إِلَّا كَفَرَ وَمَنْ ادَّعَى مَا لَيْسَ لَهُ فَلَيْسَ مِنَّا وَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنْ النَّارِ وَمَنْ دَعَا

رَجُلًا بِالْكُفْرِ أَوْ قَالَ عَدُوَّ اللهِ وَلَيْسَ كَذَلِكَ إِلَّا حَارَ عَلَيْهِ (م/ ٦١)

“ஒருவன் அறிந்து கொண்டே தன் தந்தையல்லாத வேறு ஒருவருடன் தன்னை இணைத்து (நான் அவருடைய மகன்தான் என்று) கூறினால் அவன் கா.ஃ.பிராகிவிடுவான். ஒருவன் தனக்கு உடமையில்லாத ஒன்றை தனக்குரியது தான் என்று வாதிட்டால் அவன் நம்மைச் சார்ந்தவனல்ல. மேலும் அவன் தனது இருப்பிடத்தை நரகில் அமைத்துக் கொள்ளட்டும். ஒருவன் இன்னொருவனைக் கா.ஃ.பிர் என்றோ அல்லாஹ்வின் விரோதி என்றோ கூறினால் அவன் அவ்வாறு இல்லை எனில் அது சொன்வன் மீதே திரும்பி விடும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதர்(ரலி), நூல்: முஸ்லிம்(61)

74. இவ்வாறு நடந்துவிட்டால் நான் இஸ்லாத்தை விட்டும் விலகிவிடுவேன் என்று கூறாதீர்கள். அல்லது இன்னின்னவாறு நிகழ்ந்துவிட்டால் நான் யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ ஆகிவிடுவேன் என்று கூறாதீர்கள்.

عَنْ بُرَيْدَةَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ قَالَ إِنِّي بَرِيءٌ مِنْ الْإِسْلَامِ فَإِنْ كَانَ كَاذِبًا فَهُوَ كَمَا قَالَ وَإِنْ كَانَ صَادِقًا لَمْ يَعُدْ إِلَى الْإِسْلَامِ سَالِمًا (نس/ ٣٧١٢، جه/ ٢١٠٠) صححه الألباني

“நான் இஸ்லாத்தை விட்டும் விலகிவிட்டேன் என்று யாரேனும் கூறினால் (இக்கூற்றில்) அவர் பொய்யராக இருந்தால் அவர் கூறியதுபோல் ஆகிவிடுவார். இதில்

அவர் உண்மையாளராக இருந்தால் இஸ்லாத்தின் பக்கம் அவர் குற்றமற்றவராகத் திரும்ப மாட்டார்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: புரைதா (ரலி), நூல்: நஸயீ(3712), இப்னுமாஜா(2100), அல்பானி இதை சரிகண்டுள்ளர்கள்.

75. முஸ்லிம் அல்லாதவன், நயவஞ்சகன், தீயவன், தான் செய்த பாவத்தைப் பகிரங்கமாகப் பேசுபவன் ஆகியோரைத் தலைவரே! என்று அழைக்காதீர்கள்.

عَنْ بُرَيْدَةَ أَنَّ نَبِيَّ الله ﷺ قَالَ لَا تَقُولُوا لِلْمُنَافِقِ سَيِّدَنَا فَإِنَّهُ إِنْ يَكُ سَيِّدَكُمْ فَقَدْ أَسْخَطْتُمْ رَبَّكُمْ عَزَّ وَجَلَّ (حم/ ٢١٨٦١، د/ ٤٩٧٧)

“நயவஞ்சகனைக் குறித்து “எங்கள் தலைவர்” என்று கூறாதீர்கள். அவன் உங்கள் தலைவராக இருந்தால் உங்கள் இறைவனை நீங்கள் கோபத்தில் அழ்த்தியவ ராவீர்கள்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: புரைதா(ரலி), நூல்: அஹ்மத் (21861), அபூதாவூது(4977),அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

76. அல்லாஹ்வின் மார்க்கத்தில் புதிதாக எதையும் ஏற்படுத்தாதீர்கள். ஏனெனில் வணக்க வழிபாடுகளில் சட்டத்தின் அசல் நிலை “கூடாது என்பதுதான். குர்ஆன் அல்லது ஹதீஸிலிருந்து முறையான ஆதாரம் இருந் தாலே தவிர. (ஆதாரம் இருந்தால் அது கூடும்.) மேலும் பித்அத்துகளைச் செய்யாதீர்கள்; (குர்ஆன் ஹதீஸையே) பின்பற்றுங்கள்; அதுவே உங்களுக்குப் போதும்.

முஹம்மது நபி(ஸல்)அவர்களின் வழிமுறையைப் பற்றிப் பிடியுங்கள். வழிகாட்டலிலேயே சிறந்தது அதுதான். மார்க்கத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அனைத்தும் பித்அத்துகளே. பித்அத்துகள் அனைத்தும் வழிகேடே. வழிகேடுகள் அனைத்தும் நரகத்தில் சேர்க்கும்.

عَنْ عَائِشَةَ قَالَتْ قَالَ رَسُولُ الله ﷺ مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ فِيهِ فَهُوَ رَدٌّ (خ/ ٢٦٩٧، م/ ١٧١٨)

“நம்முடைய இந்த மார்க்கத்தில்- அதில் இல்லாத ஒன்றை ஒருவன் புதிதாக உருவாக்கினால் அது நிராகரிக் கப்படும்” -நபிமொழி. (புகாரி-2697,முஸ்லிம்-1718)

77. இறைமார்க்கத்தில் கெட்ட முன்மாதிரியை மக்க ளிடையே உருவாக்காதீர்கள். அப்படிச் செய்தால் அதன் பாவமும் கியாமத் நாள் வரை அதைப் பின்பற்றியோரின் பாவமும் உங்களை வந்து சேரும்.

عَنْ جَرِيرِ بْنِ عَبْدِ الله قَالَ قَالَ رَسُولُ الله ﷺ مَنْ سَنَّ فِي الْإِسْلَامِ سُنَّةً حَسَنَةً فَعُمِلَ بِهَا بَعْدَهُ كُتِبَ لَهُ مِثْلُ أَجْرِ مَنْ عَمِلَ بِهَا وَلَا يَنْقُصُ مِنْ أُجُورِهِمْ شَيْءٌ وَمَنْ سَنَّ فِي الْإِسْلَامِ سُنَّةً سَيِّئَةً فَعُمِلَ بِهَا بَعْدَهُ كُتِبَ عَلَيْهِ مِثْلُ وِزْرِ مَنْ عَمِلَ بِهَا وَلَا يَنْقُصُ مِنْ أَوْزَارِهِمْ شَيْءٌ (م/ ١٠١٧)

“இஸ்லாத்தில் யார் ஒரு அழகிய முன்மாதிரியை ஏற்படுத்துகிறாரோ அவருக்கு அதற்கான கூலியும், அவருக்குப் பிறகு யாரெல்லாம் அதை மேற்கொள்கின்

றாரோ அவர்களுடைய கூலியும் கிடைக்கும். அவர்களது கூலியில் எதுவும் குறைக்கப்பட மாட்டாது. யார் இஸ்லாத்தில் தீய முன்மாதிரியை ஏற்படுத்துகிறாரோ அவருக்கு அதற்கான பாவமும் அவருக்குப் பின் யாரெல் லாம் அதை மேற்கொள்கிறாரோ அவர்களது பாவமும் கிடைக்கும். அவர்களது பாவத்தில் எதுவும் குறைக்கப்பட மாட்டாது" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப் பவர்: ஜரீர்(ரலி), நூல்: முஸ்லிம் (1017)

78. திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸில்- சரியான ஞானம் இல்லாமல் உங்களது சொந்த அபிப்ராயத்தை வைத்துக் கொண்டு தர்க்கம் செய்யாதீர்கள். அவ்விரண்டிலிருந்து வெளிப்படும் கருத்துக்களைப் புரியாமலும், அவை தொடர்பாக நம்முன்னோர்களான சான்றோர்களின் கூற்றுக்களை அறியாமலும் அவற்றின் அர்த்தத்தில் மூழ்கிவிடாதீர்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ الْمِرَاءُ فِي الْقُرْآنِ كُفْرٌ (د/ ٤٦٠٣) وقال الألباني حسن صحيح

"திருக்குர்ஆனில் தர்க்கம் செய்வது இறைமறுப்பாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: அபூதாவூது(4603), இதனை ஹஸன், ஸஹீஹ் தரத்திலானது என்று அல்பானி அவர்கள் கூறியுள்ளார்கள்.

79. (ஷரீஆத் தொடர்பாக) உங்களுக்குத் தெரியாத விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டு எதையும் கூறாதீர்கள். அப்படிச் செய்தால் உண்மையில்லாத விஷயங்களை அல்லாஹ்வின் மீது ஏற்றிச் சொல்லும் பாவத்தில் விழுந்துவிடுவீர்கள்.

﴿ وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ إِنَّ السَّمْعَ وَالبَصَرَ وَالفُؤَادَ كُلُّ أُولَئِكَ كَانَ عَنْهُ مَسْئُولًا ﴾ [الإسراء:٣٦]

உமக்கு எதைப் பற்றி (தெளிவான) அறிவு இல்லையோ அதனைப் பின்பற்றாதீர்! செவி, பார்வை, உள்ளம் ஆகிய அனைத்துமே விசாரிக்கப்படுபவை. (17:36)

80. அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைந்து கூறா தீர்கள். அல்லாஹ்வை நம்பிக்கை கொள்ளாதவர்களே அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைந்து கூறுபவர்கள்.

﴿ وَيَوْمَ القِيَامَةِ تَرَى الَّذِينَ كَذَبُوا عَلَى اللهِ وُجُوهُهُمْ مُسْوَدَّةٌ أَلَيْسَ فِي جَهَنَّمَ مَثْوًى لِلْمُتَكَبِّرِينَ ﴾ [الزُّمر:٦٠]

அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டியோரின் முகங்கள் கருத்துப் போய் இருப்பதை கியாமத் நாளில் காண்பீர்கள். ஆணவம் கொண்டோருக்கு நரகத்தில் தங்குமிடம் இல்லையா? (அல்குர்ஆன் 39:60)

81. அல்லாஹ்வின் தூதர் மீது பொய்யைப் புனைந்து கூறாதீர்கள். அவர்கள் சொல்லாததை அல்லது செய்யா

ததை அவர்கள் சொன்னதாக அல்லது செய்ததாக இணைத்துச் சொல்லாதீர்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ وَمَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنْ النَّارِ

(خ/ ١١٠، م/ ٣)

“என் மீது வேண்டுமென்றே எவன் பொய் சொல்கி றானோ அவன் தனது இருப்பிடத்தை நரகில் அமைத்துக் கொள்ளட்டும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), (புகாரி-110, முஸ்லிம்-3)

82. அல்லாஹ் மற்றும் அவன் தூதரின் கட்டளைக்கு எதிரில் வேறு ஒருவரின் கட்டளைக்கோ கருத்துக்கோ சட்டத்திற்கோ கூற்றுக்கோ அறிவுக்கோ முன்னுரிமை தராதீர்கள். முன்னரும் பின்னரும் அதிகாரம் அல்லாஹ் வுக்கே உரியது. அவன் செய்வது பற்றி அவன் விசாரிக் கப்பட மாட்டான். அவர்களே விசாரிக்கப்படுவார்கள்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُقَدِّمُوا بَيْنَ يَدَيِ اللهِ وَرَسُولِهِ وَاتَّقُوا اللهَ إِنَّ اللهَ سَمِيعٌ عَلِيمٌ﴾

[الحجرات:١]

நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ் மற்றும் அவன் தூதரின் முன்னிலையில் முந்தாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். திண்ணமாக அல்லாஹ் செவியேற்பவன்; அறிந்தவன். (அல்குர்ஆன் 49:1)

83. அல்லாஹ்வின் மார்க்கத்திலும் அவனது ஷரீஅத் திலும், அவனுடைய புனிதச் சின்னங்களிலும் உங்கள்

விருப்பத்திற்கும் மனோ இச்சைக்கும் ஏற்றதை தேர்வு செய்துவிட்டு மற்றதை அது உங்கள் விருப்பத்துக்கு மாற்றமாக இருக்கிறது என்பதற்காக விட்டுவிடாதீர்கள். ஏனெனில் இறைமார்க்கம் என்பது கூறுபோட முடியாத பல உட்பிரிவுகள் கொண்ட முழுத் தொகுப்பாகத் திகழ் கின்றது. எனவே வேதத்தில் சிலவற்றை ஏற்று சிலவற்றை மறுக்காதீர்கள்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ادْخُلُوا فِي السِّلْمِ كَافَّةً وَلَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّيْطَانِ إِنَّهُ لَكُمْ عَدُوٌّ مُبِينٌ﴾ [البقرة:٢٠٨]

நம்பிக்கை கொண்டோரே! இஸ்லாத்தில் முழுமையாக இணைந்துவிடுங்கள். ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். அவன் உங்களுக்குப் பகிரங்க விரோதி யாவனான். (அல்குர்ஆன் 2:208)

84. நபி (ஸல்) அவர்கள் தமது இறைவனிடமிருந்து கொண்டு வந்த இறைமார்க்கத்தின் போதனைகளில் எதையும் உங்கள் தவறான புரிதலின் காரணமாகவோ உண்மைக்குப் புறம்பான தத்துவங்களை முன்னிட்டோ நிராகரித்து விடாதீர்கள். ஏனெனில் அறிவுக்கும் (இஸ்லாத்தின்) மூலாதாரங்களுக்கும் மத்தியில் முரண் பாடு கிடையாது. குர்ஆன், ஹதீஸின் நேரடி வாசகங் களுக்கும் சீரான சிந்தனைக்கும் மத்தியில் மோதல் என்பது கிடையாது. அப்படி அவ்விரண்டிற்கும் மத்தியில் மோதல் இருப்பது போல தோற்றம் ஏற்பட்டால் அறிவை

விட வேத மூலாதாரங்களுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

﴿ذَلِكَ بِأَنَّ اللهَ هُوَ الحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِنْ دُونِهِ هُوَ البَاطِلُ وَأَنَّ اللهَ هُوَ العَلِيُّ الكَبِيرُ﴾ [الحج:٦٢]

இது ஏனெனில், அல்லாஹ்வே உண்மையானவன். அவனையன்றி அவர்கள் அழைத்துப் பிரார்த்தனை செய்யும் தெய்வங்கள் அனைத்தும் போலியானவை. அல்லாஹ் உயர்ந்தவன்; பெரியவன்! (22:62)

85. உங்கள் மார்க்கத்தில் வரம்பு மீறாதீர்கள். உங்களுக்கு சக்தியில்லாத விஷயத்தில் உங்களை சிரமப் படுத்திக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு சக்தியில்லாத (உபரியான) வணக்கங்களை வலிந்து மேற்கொள்ளாதீர்கள். ஏனெனில் இறைமார்க்கம் எளிமையானது. இதில் மென்மையுடன் ஈடுபடுங்கள்.

عَنْ ابْنِ عَبَّاسٍ عن النبي ﷺ ...وَإِيَّاكُمْ وَالْغُلُوَّ فِي الدِّينِ فَإِنَّمَا أَهْلَكَ مَنْ كَانَ قَبْلَكُمْ الْغُلُوُّ فِي الدِّينِ (نس/ ٣٠٠٧، جه/ ٣٠٢٩) وصححه الألباني

“இறைமார்க்கத்தில் வரம்பு மீறுவதை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். இறைமார்க்கத்தில் வரம்பு மீறும் போக்கு தான் உங்களுக்கு முன் வாழ்ந்தவர்களை அழித்தது” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: நஸயீ(3007), இப்னுமாஜா(3029), அல்பானி இதனை சரிகண்டுள்ளார்.

86. மார்க்க விஷயத்தில் கடுமையான போக்கை மக்கள் மீது திணிப்பதன் மூலம் அல்லது அதனைத் தப்பும் தவறுமாக நடைமுறைப்படுத்திக் காட்டுவதன் மூலம் இறைமார்க்கம் குறித்து அவர்களை வெறுப் படையச் செய்யாதீர்கள்.

عَنْ أَبِي مُوسَى قَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ إِذَا بَعَثَ أَحَدًا مِنْ أَصْحَابِهِ فِي بَعْضِ أَمْرِهِ قَالَ بَشِّرُوا وَلَا تُنَفِّرُوا وَيَسِّرُوا وَلَا تُعَسِّرُوا (م/ ١٧٣٢)

நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களில் ஒருவரை ஏதேனும் காரியமாக (மக்களிடம்) அனுப்பும்போது, "நற்செய்தி (களை அதிகம்) கூறுங்கள், (எச்சரிக்கை செய்யும் போது கூட) வெறுப்படையச் செய்யாதீர்கள், எளிமையை மேற்கொள்ளுங்கள், (மக்களைச்) சிரமப் படுத்தாதீர்கள்" என்று கூறுவார்கள். அறிவிப்பவர்: அபூமூஸா(ரலி), நூல்: முஸ்லிம்(1732)

87. காலத்தைத் திட்டாதீர்கள். அது அல்லாஹ்வுக்கு தொல்லை செய்வதாகும். அவன் தான் காலத்தைப் படைத்து அதனைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக் கின்றான். அதில் அளவுகளை நிர்ணயம் செய்து, காரியங் களை நடத்திக் கொண்டிருக்கின்றான்.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ لَا تَسُبُّوا الدَّهْرَ فَإِنَّ اللهَ هُوَ الدَّهْرُ (م/ ٢٢٤٦)

"காலத்தைத் திட்டாதீர்கள். ஏனெனில் அல்லாஹ்வே காலமாக இருக்கின்றான்" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(2246)

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ قَالَ الله عَزَّ وَجَلَّ يُؤْذِينِي ابْنُ آدَمَ يَسُبُّ الدَّهْرَ وَأَنَا الدَّهْرُ بِيَدِي الْأَمْرُ أُقَلِّبُ اللَّيْلَ وَالنَّهَارَ (خ/ ٤٨٥٦)

மற்றொரு அறிவிப்பில் “ஆதமுடைய மகன் என்னை நோவடையச் செய்கிறான். அவன் காலத்தை ஏசுகிறான். காலம் என்பது நான் தான். எல்லா அதிகாரமும் எனது கையில் தான் இருக்கிறது. நான் தான் இரவையும் பகலையும் சுழலச் செய்து கொண்டிருக்கிறேன்” என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(4826)

88. இணைவைப்பவர்கள் வணங்கக்கூடிய கடவுளைத் திட்டாதீர்கள். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வை திட்டும் நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத் தான்.

﴿ وَلَا تَسُبُّوا الَّذِينَ يَدْعُونَ مِنْ دُونِ الله فَيَسُبُّوا اللهَ عَدْوًا بِغَيْرِ عِلْمٍ ﴾ [الأنعام:١٠٨]

அல்லாஹ்வையன்றி யாரிடம் அவர்கள் பிரார்த்திக் கிறார்களோ அவர்களைத் திட்டாதீர்கள். அவர்கள் அறிவில்லாமல் வரம்பு மீறி அல்லாஹ்வைத் திட்டு வார்கள். (6:108)

89. தீய கொள்கைகளையும் வழிகேடையும் உள்ள டக்கிய அறியாமைக்காலத்து சொற்களை- சுலோகங் களைச் சொல்லி அழைக்காதீர்கள். குலம், கட்சி, தேசீயம் மற்றும் இன ரீதியான பிடிவாதத்தையும் வெறி உணர்

வையும் போன்று! ஏனெனில் தீய கொள்கை உடைய வழிகெட்ட கட்சிகளில் சேர்வதையும் இன ரீதியான கோஷங்களின் பக்கம் இணைவதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது.

عَنْ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ عن النبي ﷺ قَالَ لَيْسَ مِنَّا مَنْ دَعَا إِلَى عَصَبِيَّةٍ وَلَيْسَ مِنَّا مَنْ قَاتَلَ عَلَى عَصَبِيَّةٍ وَلَيْسَ مِنَّا مَنْ مَاتَ عَلَى عَصَبِيَّةٍ (د/ ٥١٢١) وضعفه الألباني ((وَمَنْ قُتِلَ تَحْتَ رَايَةٍ عِمِّيَّةٍ يَغْضَبُ لِلْعَصَبَةِ وَيُقَاتِلُ لِلْعَصَبَةِ فَلَيْسَ مِنْ أُمَّتِي)) (م/ ١٨٤٨)

“இனவாதத்தின் பக்கம் அழைப்பவர் நம்மைச் சார்ந்த வரல்லர். இனவாதத்திற்காகப் போரிடுபவர் நம்மைச் சார்ந்தவரல்லர். இனவாதத்திலேயே இறந்தவர் நம்மைச் சார்ந்தவரல்லர்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜுபைர் பின் முத்யிம்(ரலி),நூல்: அபூதாவூது (5121), அல்பானி இதனைப் பலவீனப்படுத்தியுள்ளார்கள்.

“யார் இனவெறிக்காக கோபமடைந்து இனவெறிக்காக போரிட்டு இனவெறிக்காகவே கொல்லப்பட்டாரோ அவர் என் சமுதாயத்தைச் சார்ந்தவரல்லர்” என்பது நபிமொழி. நூல்: முஸ்லிம்(1848)

90. இஸ்லாம் வீழ்ச்சியடையும், விரைவில் அது தனது செல்வாக்கை இழந்துவிடும் என்று கருதாதீர்கள். இறை யுதவி பெற்ற ஒரு கூட்டத்தார் (அரீஅத்தின்) ஆதாரத்தை அல்லாஹ்வுக்காக என நிலை நாட்டிக் கொண்டிருப் பார்கள். அவர்களை ஆதாரித்து ஒத்துழைப்பு நல்க மறுப்போர் அவர்களுக்கு எந்தத் தீங்கும் அளிக்க

முடியாது. இரவு, பகல் சென்றடையும் இடமெல்லாம் இம்மார்க்கம் சென்றடையும். அல்லாஹ் தன் காரியத்தில் வெல்பவன்! நம்பிக்கை கொண்ட தன் அடியார்களில் தனக்கு உதவுவோருக்கு அவன் உதவி செய்வான். நல்ல முடிவு இறைவனை அஞ்சுவோருக்கே.

عَنْ ثَوْبَانَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِنَّ اللهَ زَوَى لِي الْأَرْضَ فَرَأَيْتُ مَشَارِقَهَا وَمَغَارِبَهَا وَإِنَّ أُمَّتِي سَيَبْلُغُ مُلْكُهَا مَا زُوِيَ لِي مِنْهَا ...(م/ ٢٨٨٩)

“இந்த பூமியை அல்லாஹ் எனக்கு சுருட்டித் தந்தான். அதன் கிழக்குப் பகுதிகளையும் மேற்குப் பகுதிகளையும் நான் பார்த்தேன். இந்தப் பூமியில் எனக்கு சுருட்டிக் காட்டப்பட்ட பகுதிகள் அனைத்தையும் எனது சமுதாயத் தினரின் ஆட்சியதிகாரம் நிச்சயம் சென்றடையும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஸவ்பான் (ரலி), நூல்: முஸ்லிம்(2889)

91. முஸ்லிம்கள் பின்தங்கி இருப்பதற்கு இஸ்லாம் தான் காரணம் என்று கருதிவிடாதீர்கள். மாறாக உண்மை என்னவெனில், அவர்கள் தம் மார்க்கத்தை விட்டும் தூரமாகி விட்டதும், தம் இறைவனின் வழிமுறையை விட்டும் விலகிவிட்டதும், பலம் மற்றும் தலைமைத்துவத் திற்கான காரணிகளை அவர்கள் தேடிக்கொள்ளாததும் தான் காரணம். இந்த சமுதாயத்தின் முந்தைய மக்கள் (சஹாபாக்கள்) எதன் மூலம் சீர்திருத்தம் அடைந்தார்

களோ அதன் மூலம் தான் இந்த சமுதாயத்தின் பிந்தைய மக்களும் சீர்திருத்தம் பெற முடியும்.

﴿وَعَدَ اللهُ الَّذِينَ آمَنُوا مِنْكُمْ وَعَمِلُوا الصَّالِحَاتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الأَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِينَ مِنْ قَبْلِهِمْ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِي ارْتَضَى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِنْ بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا يَعْبُدُونَنِي لَا يُشْرِكُونَ بِي شَيْئًا وَمَنْ كَفَرَ بَعْدَ ذَلِكَ فَأُولَئِكَ هُمُ الفَاسِقُونَ﴾ [النور:٥٥]

உங்களில் நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய் தோருக்கு அல்லாஹ் வாக்களித்துள்ளான். என்ன வெனில், அவர்களுக்கு முன் சென்றோருக்கு அதிகாரம் வழங்கியதைப் போல் அவர்களுக்கும் பூமியில் அதிகாரம் வழங்குவான். அவர்களுக்காக அவன் பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை உறுதிப்படுத்தி வைப்பான். அவர்களின் அச்சத்திற்குப் பின்னர் அச்ச மின்மையை ஏற்படுத்துவான். அவர்கள் என்னையே வணங்குவார்கள். எனக்கு எதையும் இணை கற்பிக்க மாட்டார்கள். இதன் பிறகு (இறைவனை) நிராகரித்தோரே குற்றம் புரிபவர்கள். (அல்குர்ஆன் 24:55)

92. அல்லாஹ்வின் நேசர்களையும், அவனுடைய மார்க்கத்தின் பக்கம் அழைப்போரையும் அதன் கண்ணி யத்திற்கு பாதுகாப்பு அளிப்போரையும், அதன் வரம்பு களைப் பாதுகாப்போரையும் பகைக்காதீர்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِنَّ اللهَ قَالَ مَنْ عَادَى لِي وَلِيًّا فَقَدْ آذَنْتُهُ بِالْحَرْبِ ... (خ/ ٦٥٠٢)

"என் நேசரை யார் பகைக்கிறாரோ அவரிடம் நான் போர்ப்பிரகடனம் செய்கிறேன்..." என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(6502)

93. அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கு அற்புதங்கள் இருப்பதை மறுக்காதீர்கள். ஆனால் அது இஸ்லாமிய ஷரீஅத்திற்கு ஒத்திருக்க வேண்டும். அதே நேரம் நாம் அது விஷயத்தில் ஷைத்தானின் விளையாட்டை விட்டும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். மேலும் கராமத் என்பதென்ன? பாவிகளையும் பித்அத் செய்பவர்களையும் இறைமார்க்கத்தை விட்டும் வெளியேறியவர்களையும் மேலும் சோதனைக்குள்ளாக்குவதற்காக அல்லாஹ் அளிக்கும் கால அவகாசம் என்பதென்ன? என்று தெளிவாக அறியாமல்- இவ்விரண்டையும் போட்டுக் குழப்பாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

﴿أَلَا إِنَّ أَوْلِيَاءَ اللهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ﴾ [يونس:٦٢]

கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்தப் பயமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். (10:62)

94. உங்கள் உள்ளத்தில் ஒரு முஸ்லிமை வெறுக்

கவோ குரோதம் கொள்ளவோ செய்யாதீர்கள். அதே நேரத்தில் அவனுடைய பாவங்களுக்காக அவனை வெறுப்பது அவசியமாகும்.

عَنْ أَنَسٍ أَنَّ رَسُولَ الله ﷺ قَالَ لَا تَبَاغَضُوا وَلَا تَحَاسَدُوا وَلَا تَدَابَرُوا وَكُونُوا عِبَادَ الله إِخْوَانًا وَلَا يَحِلُّ لِمُسْلِمٍ أَنْ يَهْجُرَ أَخَاهُ فَوْقَ ثَلَاثَةِ أَيَّامٍ (خ/ ٦٠٦٥، م/ ٢٥٥٩)

"நீங்கள் ஒருவர் மற்றவர் மீது குரோதம் கொள்ளவோ பொறாமை கொள்ளவோ வேண்டாம். ஒருவரையொருவர் வெறுக்க வேண்டாம். அல்லாஹ்வின் அடியார்களாகிய நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இருங்கள். ஒரு முஸ்லிம் தன் சகோதரனை மூன்று நாட்களுக்கு மேல் வெறுப்பது கூடாது" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி (6065), முஸ்லிம் (2559)

95. முஸ்லிம்களுடன் போர் புரியாதீர்கள். அவர்களுக்குக்கெதிராக ஆயுதம் தூக்காதீர்கள். அவர்கள் வரம்பு மீறினாலே தவிர. அப்போது அவர்களின் தீமையை விட்டும் தடுப்பதற்காக போர் புரிவதைத் தவிர குறைந்த பட்ச வழி ஏதும் இல்லை எனும்போது அது பற்றிக் குற்றமில்லை.

عَنْ ابن مسعود عن النَّبِيَّ ﷺ قَالَ سِبَابُ الْمُسْلِمِ فُسُوقٌ وَقِتَالُهُ كُفْرٌ(خ/٤٨، م/٦٤)

"ஒரு முஸ்லிமைத் திட்டுவது பாவமாகும். அவனுடன் போரிடுவது இறைநிராகரிப்பாகும்" என நபிகள் நாயகம்

(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத் (ரலி), நூல்: புகாரி (48), முஸ்லிம் (64)

96. முஸ்லிம்களின் ஜமாஅத்- கூட்டத்தை விட்டும் அவர்களின் ஆட்சித்தலைவரை விட்டும் விலகிவிடா தீர்கள். ஏனெனில் அல்லாஹ்வின் உதவி ஒற்றுமையில் தான் இருக்கிறது. ஒற்றுமை அருளாகும். பிரிவினைதான் வேதனையாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ مَنْ خَرَجَ مِنْ الطَّاعَةِ وَفَارَقَ الْجَمَاعَةَ فَمَاتَ مَاتَ مِيتَةً جَاهِلِيَّةً (م/ ١٨٤٨)

யார் ஆட்சித் தலைவருக்குக் கட்டுப்படுவதை விட்டும் விலகினாரோ மேலும் முஸ்லிம் ஜமாஅத்- கூட்டத்தை விட்டும் பிரிந்து சென்றாரோ மேலும் அந்நிலையிலேயே மரணமடைந்தாரோ அவர் (இஸ்லாத்திற்குப் புறம்பான) அறியாமைக் காலத்து மரணத்தைத் தழுவுவார்" என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம் (1848)

97. முஸ்லிம்களின் விவகாரங்களுக்குப் பொறுப் பேற்றிருப்பவருக்கு எதிராகக் கிளம்பாதீர்கள். அதிகா ரத்தில் அவருடன் மோதாதீர்கள். அவரிடம் தெளிவான கு∴ப்ரை- இறைமறுப்பை நீங்கள் காணும் வரை. (அவரிடம் கு∴ப்ரு இருந்தால் அவரை எதிர்க்கலாம்.) ஆனால் அவரிடம் காணப்படும் கு∴ப்ர் தவறான வியாக் கியானத்திற்கு அப்பாற்பட்டதாகவும் அது கு∴ப்ர்தான்

என்பதை உங்கள் உள்ளம் மறுக்காத வகையிலும் இருக்க வேண்டும். மேலும் அது கு∴ப்ர் என்பதற்கு குர்ஆன் ஹதீஸிலிருந்து தெளிவான ஆதாரம் உங்களிடம் இருக்க வேண்டும். இத்தனைக்கும் மேலாக இத்தகைய ஆட்சித் தலைவரை எதிர்ப்பதற்கு உங்களுக்கு சக்தியும் இருக்க வேண்டும்.

عَنْ عُبَادَةَ بْنِ الصَّامِتِ قَالَ دَعَانَا النَّبِيُّ ﷺفَبَايَعْنَاهُ فَقَالَ فِيمَا أَخَذَ عَلَيْنَا أَنْ بَايَعَنَا عَلَى السَّمْعِ وَالطَّاعَةِ فِي مَنْشَطِنَا وَمَكْرَهِنَا وَعُسْرِنَا وَيُسْرِنَا وَأَثَرَةً عَلَيْنَا وَأَنْ لَا نُنَازِعَ الْأَمْرَ أَهْلَهُ إِلَّا أَنْ تَرَوْا كُفْرًا بَوَاحًا عِنْدَكُمْ مِنْ اللهِ فِيهِ بُرْهَانٌ (خ/ ٧٠٥٦، م/ ١٧٠٩)

“நாங்கள் சுருசுருப்பாக இருக்கும்போதும் (காரிய மாற்ற) இயலாமல் இருக்கும் போதும் நன்றாக இருக்கும் போதும் துன்பத்தில் இருக்கும்போதும் செவியேற்போம், கட்டுப்படுவோம், எங்களை விட பிறருக்கு முன்னுரிமை வழங்குவோம், அதிகாரம் வகிப்பவர்களுக்கு அவர்களது அதிகாரத்தில் போட்டியாக வரமாட்டோம். ஆனால் அவர்களிடம் தெளிவான குப்∴ரை- இறைமறுப்பை நாங்கள் கண்டாலே தவிர. மேலும் இதற்கு அல்லாஹ் விடமிருந்து கிடைத்த தெளிவான ஆதாரம் இருந்தாலே தவிர!” என நபி(ஸல்)அவர்களிடம் நாங்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டோம். அறிவிப்பவர்: உப்பாதா பின் ஸாமித்(ரலி), நூல்: புகாரி(7056), முஸ்லிம்(1709)

98. படைத்தவனுக்கு மாறுசெய்யும் விஷயத்தில் எந்த மனிதனுக்கும் கட்டுப்படாதீர்கள். நன்மையான காரியத்தில் தான் எவருக்கும் கட்டுப்பட வேண்டும்.

عَنْ ابن مسعود عَنْ النَّبِيِّ ﷺ قَالَ السَّمْعُ وَالطَّاعَةُ عَلَى الْمَرْءِ الْمُسْلِمِ فِيمَا أَحَبَّ وَكَرِهَ مَا لَمْ يُؤْمَرْ بِمَعْصِيَةٍ فَإِذَا أُمِرَ بِمَعْصِيَةٍ فَلَا سَمْعَ وَلَا طَاعَةَ (خ/ ٧١٤٤، م/ ١٨٣٩)

“தான் விரும்புகின்ற, வெறுக்கின்ற (அனைத்துக்) காரியங்களிலும் செவியேற்பதும் கட்டுப்படுவதும் ஒரு முஸ்லிம் மீது கடமையாகும்- பாவமான காரியத்தை அவனுக்கு ஏவப்படாதவரை. பாவமான காரியத்தை அவனுக்கு ஏவப்பட்டால் செவியேற்பதோ கட்டுப்படுவதோ அவன் மீது கடமையில்லை” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: புகாரி (7144), முஸ்லிம் (1839)

99. மக்கள் பார்க்க வேண்டும்- பாராட்ட வேண்டும் என்பதற்காகவோ மக்களிடம் பிரபலமாக வேண்டும் என்பதற்காகவோ நற்செயல்களைச் செய்யாதீர்கள். அவர்கள் அல்லாஹ்விடமிருந்து உங்களைச் சிறிதளவும் காப்பாற்ற முடியாது. இவ்வாறு செய்வது நற்செயல்களை அழித்துவிடும். நற்கூலியை அழித்து பாவத்தைச் சேர்த்து விடும். அல்லாஹ்வின் திருமுகத்திற்காகவும் அவனது ஷரீஅத்திற்கு உட்பட்டும் செய்த செயலைத் தான் அல்லாஹ் ஏற்றுக் கொள்வான்.

﴿ فَمَنْ كَانَ يَرْجُوا لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا ﴾

[الكهف:١١٠]

தமது இறைவனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நல்ல றத்தைச் செய்யட்டும். தமது இறைவணக்கத்தில் எவரையும் இணை கற்பிக்காது இருக்கட்டும். (18:110)

100. நீங்கள் செய்த பாவத்தை மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தாதீர்கள். உங்கள் பாவத்தை (பிறருக்குத் தெரியாமல்) அல்லாஹ் மறைத்தது போல் நீங்களும் மறைத்து விடுங்கள். பிசகுதல்கள், பிழைகள், குறைகள் யாவற்றையும் விட்டும் (மன்னிப்பு கோரி) அவனிடம் திரும்பிவிடுங்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولَ الله ﷺ يَقُولُ كُلُّ أُمَّتِي مُعَافًى إِلَّا الْمُجَاهِرِينَ وَإِنَّ مِنْ الْمُجَاهَرَةِ أَنْ يَعْمَلَ الرَّجُلُ بِاللَّيْلِ عَمَلًا ثُمَّ يُصْبِحَ وَقَدْ سَتَرَهُ الله عَلَيْهِ فَيَقُولَ يَا فُلَانُ عَمِلْتُ الْبَارِحَةَ كَذَا وَكَذَا وَقَدْ بَاتَ يَسْتُرُهُ رَبُّهُ وَيُصْبِحُ يَكْشِفُ سِتْرَ الله عَنْهُ (خ/ ٦٠٦٩، م/ ١٨١٢)

“என் சமுதாயத்தாரில் (பாவம் செய்த) அனைவரும் (இறைவனால்) மன்னிக்கப்படுவார்கள். தம் பாவங்களைத் தாமே பகிரங்கப்படுத்துபவர்களைத் தவிர! பாவத்தைப் பகிரங்கப்படுத்துவது என்பது இதுதான். அதாவது ஒரு மனிதன் இரவில் ஒரு (பாவச்) செயலைச் செய்துவிட்டு, பிறகு காலையில் எழுந்ததும் அல்லாஹ் அவனது

பாவத்தை (பிறருக்குத் தெரியாமல்) மறைத்துவிட்டிருக்க, “இன்னவனே! நேற்று இரவு நான் இன்னின்ன பாவத்தைச் செய்தேன்” என்று அவனே கூறுவதாகும். (அவன் செய்த பாவத்தை) இரவில் (வெளியே தொரியாமல்) அவனுடைய இறைவன் மறைத்தான். ஆனால் அவனோ இறைவன் மறைத்ததைக் காலையில் வெளிச்சப்படுத்துகிறான்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபுஹுரைரா(ரலி), நூல்: புகாரி (6069), முஸ்லிம் (1812)

101. உங்களைப் பார்த்துக் கொண்டிருப்போரில் அல்லாஹ்வை சாதாரணமானவனாகவும் உங்களை அறிந்து கொண்டிருப்போரில் அவனை அற்பமான வனாகவும் கருதிவிடாதீர்கள். அல்லாஹ்வுக்கு வெட்கப் படுங்கள். அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவன்!

عَنْ ثَوْبَانَ عَنْ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ لَأَعْلَمَنَّ أَقْوَامًا مِنْ أُمَّتِي يَأْتُونَ يَوْمَ الْقِيَامَةِ بِحَسَنَاتٍ أَمْثَالِ جِبَالِ تِهَامَةَ بِيضًا فَيَجْعَلُهَا اللهُ عَزَّ وَجَلَّ هَبَاءً مَنْثُورًا قَالَ ثَوْبَانُ يَا رَسُولَ اللهِ صِفْهُمْ لَنَا جَلِّهِمْ لَنَا أَنْ لَا نَكُونَ مِنْهُمْ وَنَحْنُ لَا نَعْلَمُ قَالَ أَمَا إِنَّهُمْ إِخْوَانُكُمْ وَمِنْ جِلْدَتِكُمْ وَيَأْخُذُونَ مِنْ اللَّيْلِ كَمَا تَأْخُذُونَ وَلَكِنَّهُمْ أَقْوَامٌ إِذَا خَلَوْا بِمَحَارِمِ اللهِ انْتَهَكُوهَا (جه/ ٤٢٤٥)

“என் சமுதாயத்தில் சில கூட்டத்தார்களை நான் அறிவேன். கியாமத் நாளில் அவர்கள் “திஹாமா” பகுதி யிலுள்ள மலைகளைப் போல (ஏராளமான) தெளிவான நன்மைகளைக் கொண்டு வருவார்கள். அல்லாஹ்

அவற்றை பரப்பப்பட்ட புழுதியாக ஆக்கிவிடுவான்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதும், “அல்லாஹ்வின் தூதரே! அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று எங்களுக்குக் கூறுங்கள்; அவர்களைப் பற்றி எங்களுக்குத் தெளிவுபடுத் துங்கள். விவரம் தெரியாமல் அவர்களின் கூட்டத்தில் நாங்கள் சேர்ந்துவிடாமல் இருப்பதற்காகத்தான்” என்று ஸவ்பான்(ரலி) அவர்கள் கூறினார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிந்துகொள்ளுங்கள்! அவர்கள் உங்கள் சகோதரர்கள், உங்கள் இனத்தைச் சேர்ந்த வர்கள், இரவின் ஒரு பகுதியில் (இறைவணக்கத்தில்) நீங்கள் ஈடுபடுவது போல் அவர்களும் ஈடுபடுகிறார்கள். ஆனால் அல்லாஹ்வினால் தடை செய்யப்பட்ட பொருட்கள் தமக்கு அருகிலிருக்கும் நிலையில் அவர்கள் தனிமையில் இருந்தால் தடையை மீறிவிடுவார்கள்” எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: ஸவ்பான்(ரலி), நூல்: இப்னுமாஜா(4245), அல்பானி இதனை சரிகண்டுள்ளார்.

102. அல்லாஹ்வின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டு மக்களின் திருப்தியைத் தேடாதீர்கள். மற்றவர் களின் விருப்பத்தைவிட அல்லாஹ்வின் கட்டளைக்கு முன்னுரிமை தாருங்கள். எல்லோரிடமிருந்தும் அல்லாஹ் உங்களைக் காப்பாற்றிவிடுவான். ஆனால் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து யாரும் உங்களைக் காப்பாற்ற முடியாது.

عن عَائِشَةَ قالـت: سَمِعْتُ رَسُولَ الله ﷺ يَقُولُ مَنْ الْتَمَسَ رِضَا الله بِسَخَطِ النَّاسِ كَفَاهُ الله مُؤْنَةَ النَّاسِ وَمَنْ الْتَمَسَ رِضَا النَّاسِ بِسَخَطِ الله وَكَلَهُ الله إِلَى النَّاسِ (ت/ ٢٤١٤) وصححه الألباني

“மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டு இறைவனின் திருப்தியை யார் தேடுகிறாரோ அவருக்கு மக்களின் உதவியை விட்டும் அல்லாஹ் போதுமானவன். அல்லாஹ்வின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டு மக்களின் திருப்தியை யார் தேடுகிறாரோ அவரை அல்லாஹ் மக்களிடமே விட்டுவிடுகிறான்” என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), நூல்: திர்மிதி(2414), அல்பானி இதனை சரிகண்டுள்ளார்கள்.

103. பாவத்தின் சிறுமையைப் பார்க்காதீர்கள். ஆனால் யாருக்குப் பாவம் செய்கிறீர்களோ அவனது மகத்து வத்தைப் பாருங்கள். அகில உலகையும் படைத்த இறைவனாகிய அல்லாஹ் அல்லவா அவன்!

﴿مَا لَكُمْ لَا تَرْجُونَ لِلهِ وَقَارًا﴾ [نوح:١٣]

உங்களுக்கு என்ன நேர்ந்தது? அல்லாஹ்வின் மகத்து வத்தை உணராமலிருக்கின்றீர்கள்! (71:13)

104. இவ்வுலக வாழ்க்கையையே உங்கள் நோக் கமாக, இலட்சியமாக, நாட்டமாக ஆக்கிக் கொள்ளா தீர்கள். அவ்வாறாயின் உலக வாழ்வே உங்கள் முன்

உள்ள பெரிய கவலையாக, உங்கள் அறிவின் இறுதி எல்லையாக ஆகிவிடும்.

﴿مَنْ كَانَ يُرِيدُ الحَيَاةَ الدُّنْيَا وَزِينَتَهَا نُوَفِّ إِلَيْهِمْ أَعْمَالَهُمْ فِيهَا وَهُمْ فِيهَا لَا يُبْخَسُونَ، أُولَئِكَ الَّذِينَ لَيْسَ لَهُمْ فِي الآَخِرَةِ إِلَّا النَّارُ وَحَبِطَ مَا صَنَعُوا فِيهَا وَبَاطِلٌ مَا كَانُوا يَعْمَلُونَ، ﴾. [هود:١٥،١٦].

இவ்வுலக வாழ்க்கையையும் அதன் கவர்ச்சியையும் நாடுவோரின் செயல் (களுக்கான பலன்) களை இங்கேயே முழுமையாகக் கொடுப்போம். இங்கே அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள். அவர் களுக்கு மறுமையில் நரகத்தைத் தவிர வேறில்லை. (இவ்வுலகில்) அவர்கள் உருவாக்கியவை யாவும் அங்கே அழிந்துவிடும். அவர்கள் செய்துகொண்டிருந்தவையும் வீணாகிவிடும். (அல்குர்ஆன் 11:15,16)

105. மறுமை நாளை மறந்துவிடாதீர்கள். அதற்காகத் தயாராவதை விட்டும் கவனமற்று இருக்காதீர்கள். நீங்கள் அல்லாஹ்விடம் திரும்ப வேண்டியிருக்கிறது; அவன் முன்னால் நிற்க வேண்டியிருக்கிறது! அப்போது நீங்கள் செய்த சிறிய, பெரிய, அற்பமான, மகத்தான செயல்கள் அனைத்தையும் அவன் உங்களிடம் விசாரிப்பான்.

﴿وَاتَّقُوا يَوْمًا تُرْجَعُونَ فِيهِ إِلَى اللهِ ثُمَّ تُوَفَّى كُلُّ نَفْسٍ مَا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ﴾ [البقرة:٢٨١]

அல்லாஹ்விடம் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படும் நாளை அஞ்சுங்கள்; பின்னர் ஒவ்வொருவருக்கும் அவரவர் சம்பாதித்தவற்றுக்கான கூலி முழுமையாகக் கொடுக்கப்படும். அவர்கள் அநீதி இழைக்கப்பட மாட்டார்கள். (அல்குர்ஆன் 2:281)

﴿ وَتَزَوَّدُوا فَإِنَّ خَيْرَ الزَّادِ التَّقْوَى ﴾ [البقرة:١٩٧]

தேவையானவற்றைத் திரட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் திரட்டிக் கொள்ள வேண்டியவற்றில் இறையச்சமே மிகச் சிறந்தது. (அல்குர்ஆன் 2:197)

**முடிவுரை:**

இப்போது இந்நூலின் இறுதிப் பகுதியை எட்டிவிட் டோம். இந்நூலில் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை, ஏகத்துவக் கோட்பாடுகளின் ஒரு சில பகுதிகள் மீதான வேகமான ஒரு கண்ணோட்டத்தை திடீரெனத் தோன்றி மறையும் ஒளிக் கீற்று போல் சுருக்கமாகக் கண்டோம். இந்நூல் எளிய நடையிலும் இலகுவான பாணியிலும் அமைந்திடவும் கருத்துக்களைத் தெளிவாகப் புரிய வைப் பதற்கும் பெரிதும் முயன்றுள்ளேன். யார் இந்நூலைப் பார்த்துப் படித்து, இதிலுள்ள கருத்துக்களின் பக்கம் மக்களை அழைத்து, இதைப் பரப்புவதற்கு உதவியும் செய்து எமக்குப் பெருமை சேர்த்தார்களோ அவர்களுக்கு அல்லாஹ் அருட்பாக்கியங்களைத் தருவானாக!

இந்நூல் சரியாகவும் முறையாகவும் அமைந்து இருந்தால் அது அல்லாஹ்வின் உதவியால் ஏற்பட்ட தாகும். அவனே சத்தியத்தின் பால் வழிகாட்டுபவன்! அதில் நிலைத்திருக்கச் செய்பவன்! ஏதேனும் தவறுகள் வழிச்சறுகல்கள் இருந்தால் அது என்னிடமிருந்தும் ஷைத் தானிடமிருந்தும் ஏற்பட்டதாகும். ஏனெனில் அல்லாஹ் இதனை விட்டும் தூய்மையானவன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு இதில் எந்தத் தொர்பும் இல்லை. நான் என் இறைவனிடம் என் அனைத்துப் பாவங்களை விட்டும் மன்னிப்புக் கோருகிறேன். என் குறைகளை எனக்குச் சுட்டிக்காட்டுவோருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக.

கூடுதல் பயன் பெற விரும்புவோர் இத்துறையைச் சேர்ந்த அறிஞர்களின் நூல்களைப் பார்வையிட வேண்டும். உண்பது, பருகுவது, மூச்சுவிடுவது, ஆகிய வற்றின் தேவையை விட இறைமார்க்கம் தொடர்பான கல்வி நமக்கு அதிகம் தேவையாக இருக்கிறது. ஆம்! எப்படி இல்லாமல் இருக்க முடியும்? வானங்கள் மற்றும் பூமி அளவுக்கு விசாலமான சொர்க்கம் அல்லவா இதன் பிரதிபலன்! அந்த சொர்க்கத்தில் எவரது உள்ளத்திலும் உதித்திராத, எவரது சிந்தனையிலும் தோன்றிராத நிரந்தரமான இன்பங்களும் அனைத்து வகையான பாக்கியங்களும் உண்டே! இவையெல்லாம்

அல்லாஹ்விடம் இருந்து கிடைக்கும் அருளும் பாக்கிய முமேயாகும்.

இதற்கு நேர் மாற்றமாக கொழுந்து விட்டு எரியும் நரகத்தில் நிரந்தரமான துர்பாக்கியங்களும், நீங்காத வேதனைகளும் உண்டு. துர்பாக்கியசாலியைத் தவிர வேறு எவரும் அதில் தள்ளப்பட்டுக் கருக மாட்டார். இது அல்லாஹ்வின் நீதியும் அவனது விவேகமும் ஆகும்.

எனவே அல்லாஹ்விடமே இறைஞ்சுவோம். அவனது திருப்தியையும் சொர்க்க பாக்கியத்தையும் கேட்போம். அவனுடைய நரகத்தை விட்டும் தண்டனையை விட்டும் அவனிடம் பாதுகாப்புத் தேடுவோம். ஆரம்பத்திலும், இறுதியிலும், வெளிப்படையிலும், அந்தரங்கத்திலும் அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே!